**பாபாலால்**—ரத்ன, தங்க, வெள்ளி நகை வியாபாரிகள்
Regd. No. M. 916.    216, சைனாபஜார் ரோட், சென்னை.

॥ ஸ்ரீ: ॥

# வேதாந்த தீபிகை.

ஸம்புடம் 19]    விபவ௵—மார்கழிமீ    [ஸஞ்சிகை 3



பத்ராதிபர்:—ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

வருஷ சந்தா ரூ. 3.]    December, 1928.    [ஸஞ்சிகை 1-க்கு அணா 6

ஸ்ரீ:

## விஷய ஸூசிகை.

1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்—ஸ்ரீ. உப, வித்வாந் ஏ. வி. கோபாலாசார்யர் எம். ஏ. பி. எல். ... ... ... 65
2. ஸ்ரீ ராமாநுஜாசார்யரும் ஸ்ரீ கண்டாசார்யரும்— ஸ்ரீ உப. வித்வாந் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர் ... ... 71
3. ஸ்ரீ நிகமாந்த மஹா் தேசிக கவிதா் விஷய விமர்சம் ஸ்ரீ உப. வித்வாந் த. வே. ஸ்ரீநிவாஸாசார்யர், திருச்சி ... ... 75
4. பிராட்டியின் வைபவம்:—ஸ்ரீ. உப. வித்வாந். காடந்தேத்தி கோபாலாச்சாரியர். ... ... ... ... 80
5. புஸ்தக விமர்சம் ... ... ... 86
6. கடிதங்கள் ... ... ... ... 93
7. ஸம்பாதகீயம்:— ... ... ... 59
8. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்—ஸ்ரீ உப. வாஸுதேவாசார்யர் ... 201
9. பரிகர விஜயம்:—ஸ்ரீ உப. வித்வாந் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர் 1

**வைரங்கள்.**

**T. B. MEHTA & SONS,**

DIAMOND MERCHANTS,

453, Mint Street, P.T. Madras.

**Phone No. 3555.**

ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ॥

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 19.] விபவஸு மார்கழிமீ [ஸஞ்சிகை 3

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா

[ ஸ்ரீ பாகவதம். 1-9-23 ]

## ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்.

[ஸ்ரீமான் உப. வித்வான். ஏ. வீ. கோபாலாசார்யர், திருச்சி.]

(ஸஞ்சிகை 2 பக்கம் 39 தொடர்ச்சி.)

பரவாஸுதேவனுடைய ஒரு மூர்த்தியாகிய ஹயக்ரீவன் வேதங்களை உபதேசிக்கிறார் என்று உரைப்பதற்கு இந்த நாடகத்தில் எப்படி உபயோகம் என்பதைப் பராமர்சிப்போம். நான்கு வேதங்களிலிருந்தும் நாடகத்திற்கு வேண்டிய ஸாமக்ரீ முழுவதும் ஸாரமாக எடுக்கப்பட்டிருக்கிறதென்று பரத சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளது. வாத்யத்தை ருக்வேதத்திலிருந்தும், ஸங்கீதத்தை ஸாம வேதத்திலிருந்தும், அபிநயத்தை யஜுர் வேதத்திலிருந்தும், ரஸங்களை அதர்வ வேதத்திலிருந்தும் பகவான் எடுத்தார். இதற்கு 'ஜக்ராஹ பாட்யம் ருக்வேதாத் ஸாமப்யோ கீதமேவ ச । யஜுர்வேதாதபிநயாந் ரஸாநாதர்வணாதபி' என்கிற பரத வசநம் ப்ரமாணம். நான்கு வேத ஸாரம் நாட்யம். ஸாம வேதம் உயர்ந்த பாட்டு என்பது ப்ரஸித்தம். 'கீதிஷு ஸாமாக்யா' என்று ஜைமிநி ஸூத்ரம். ருக்வேதத்தால் ஹோதா 'ஓ' வென்று கூப்பிட்டுக் கொண்டிருக்க வேணும்.

அது பக்க வாத்ய முறையில் சேரும். யஜுர் வேதத்தால் அத்வர்யு செய்வது அபிநயமாகும். ச்ருங்காரம் ரௌத்ரம் முதலிய ரஸங்கள் அதர்வ வேதத்தைச் சார்வன. இப்படி, நான்குவேத மயமாய் ஹயக்ரீவனுடைய களிப்பு இருப்பதாக 'ஸாமாஹார ஸ்ரோதஸாம்' என்கிற ச்லோகத்தில் காட்டப்பட்டிருக்கிறது. கீதி ரூபமான ஸாமாக்களுடைய ஸமாஹாரம் ஸங்கீதம். ருக்குக்களின் ப்ரதி பதம் என்பது பாட்டை அநுவதிக்கும் பக்க வாத்யம். யஜுஸ்ஸுகளின் 'பாவ' என்பது பாவத்தை ப்ரகாசப்படுத்தும் அபிநயம். 'பொயஜமுயி:' என்பது ரஸமயமான ஜ்ஞாந ஸமுத்ரம். அதனுடைய அலைகள் 'முஹரிவிததி:', 'வேறொரு நினைப்பினால் தடுக்கப்படாமல் மற்றதையெல்லாம் மறக்கச் செய்வது' என்கிற ரஸ ஸ்வபாவம் 'ப்ரத்யூஹாநாம் முய:' என்று சொல்லப்பட்டது. வேதங்களைக் களிப்பாகச் சொல்லுகிற முன் பாதியின் கடைசியில், நான்காம் வேதம் சொல்லப்பட்டதாகக் கொள்ளலாம். வேதமயமான வாதங்களுக்கு ஹயக்ரீவனை உபாஸிப்பது போல் வேதஸாரமான நாடகத்திற்கும் அவரை உபாஸிக்கத்தட்டில்லை. வைதிகமல்லாத நாடகங்களுக்கே வேதம் மூலமாகிற பொழுது, வேதமயமான இந்த ஆத்ம நாடகத்திற்கு வேதமே மூலம் என்று சொல்ல என்ன தடை? அகண்டமான சாந்தி ரஸம் கண்டமான சில்லறை ரஸங்களின் ரூபத்தைத் தரிக்கிறதென்று சொல்வது கூடுமோ என்று ஆக்ஷேபித்தால், அகண்டமான ப்ரஹ்மம் கண்டமான பல வேஷங்களைத் தரித்துப் பாவுகர்களான பக்தர்களை ரஞ்ஜிப்பிக்கிறது என்று அடுத்த ச்லோகத்தில் கூறுகிறார் த்ருஷ்டாந்தமாக. 'தெவொ ந:' என்கிற ச்லோகத்தைத் தசாவதார ஸ்தோத்ர வ்யாக்யாநத்தில் பாக்கச் சொன்னோம்; இங்கே சுருங்கச் சொல்லுவோம்.

நாடகமாடுமுன் நாடக ஸம்ப்ரதாயத்திற்கு ஆதி குருவை வணங்க வேண்டியது ந்யாயம். 'ய: காலிநீகவிதக ருதாய-ுகாய: ஸொயம் விஹாதி விஹ-ராதி நட: வராணா:' என்று ஸ்ரீநடராஜனைச் சிலர் வழிபடுவார்கள். ஸ்வாதீந ஸர்வதத்வ ஸத்தாகமான ஸ்வதந்த்ரதைவதத்தின் க்ருபா கடாக்ஷத்தை நாம் கோருகிறோம். 'தெவ:' என்று அந்தத் தைவத்தைச் சொல்லுகிறது. ஸாபேக்ஷத்தைக் காட்டிலும் நிரபேக்ஷம் பலமுடையது என்று ந்யாயம். நிருபபதமான 'தெவ' சப்தம் ஆதிதேவனைச் சொல்லும்; விளையாடுகிறது என்கிற சீலம் உடையவனையும் சொல்லும். 'ஜ்யோதிஸ்ஸை உடையவன்' என்பதற்கு, ஸம்ஸாரமாகிற நள்ளிருளில் தானே தன்னை ப்ரகாசப்படுத்திக் கொள்ளும்படியான ஜ்யோதிர்மயமான விளக்கொளியாய் இருக்கிறானென்றும் பாவம். நாடகத்திற்குத் தீபத்தால் தான் சோபை. 'தீவ்யதிஃ-ராந க்ஷ-ரா' என்று பட்டர் அருளிச்செய்தபடி; கொடுக்கிறவன் என்றும் அதற்கு அர்த்தம்; நாடகம் பார்க்கிறவர்களிடமிருந்து த்ரவ்யத்தை வாங்

கிக்கொள்கிறவ னல்லனென்றும், தன் வேஷத்தையும் சேஷ்டைகளையும் ஆவலுடன் பார்ப்பவர்களுக்கு ஸகல ஸம்பத்தையும் கொடுப்பவ னென்றும் அர்த்தம். 'ஸுஹம்' என்று அவனுடைய சுபாச்ரயமான உருவத்தைச் சொல்லுகிறது. அது நம் கண்ணுக்குக் களிப்பாக எதிரில் பரப்பி ஸேவை கொடுக்கட்டும். நாம் ஒரு ப்ரபந்ந வேஷம் போட்டுக் காட்டுவதற்குப் பதிலாக, அவன் பதின்மடங்காய்ப் பத்து அவதார வேஷங்களைப் போட்டுக் காட்டுகிறுன். ரங்க பூமியில் வேஷங்கள் எடுத்து ஆடுவது உசிதம். ரங்கத்தில் பத்து அவதார வேஷங்களையும் எடுத்து அவன் ஸேவை ஸாதிக்கிறுன். மற்ற நடர்களுக்கு வீடு வேறும் கூத்தாடும் ரங்க பூமி வேறுமாயிருக்கும். நாடக சாலையில் கூத்தாடிகள் குடியிருக்கமாட்டார் கள். இவன் விஷயம் அப்படியன்று. தமர் எக்காலத்தில் எவ்வுருவம் உகந்தாலும் அவ்வுருவத்தைத் தான் உகந்து தரிக்கும் இந்த நடன் எப்பொழுதும் ரங்கத்தையே தாமாவாக (அதாவது குடியிருப்பு இடமாக) வைத்துக் கொண்டிருக்கிறுன். தமர் நினைத்த மாத்ரத்தில் அவர் ஆசைப்பட்ட வேஷத்தை உடனே தரிப்பதற்கு அங்கேயே இருந்தால் ஸௌகர்யமன்ரோ? நிர்ப்பர ரஸம் என்பது பூர்ணமானதும் அகண்டமுமான சாந்தி ரஸம். அவன் வேஷ மெடுப்பது மன்றியில், அவன் வேஷ மெடுக்கும் பற்பல ஜாதிகளிலும் தானும் தன்னிச்சைபாகவே அநுரூபமான வேஷங்களை அவனுடைய நாயகியும் எடுத்துக்கொண்டு விளையாடுகிறுள். கருணு வ்யாபாரங்களான அவதார கார்யங்களில், இவள், தன் நாயகனையும் அதிசயிக்கிறுள் என்று 'நாநாகரு திঃ' என்பதினுல் கூறப்பட்டது. வேதங்களை ப்ரவசநம் செய்யும் ஹயக்ரீவன் வாஸுதேவனுடைய மூர்த்தி என்று இங்கே சொல்லியதற்கு, வேதங்களின் ஸாரமான இந்த நாடகத்தையும் அந்த வாஸுதேவ மூர்த்தியே சொல்லுகிறுர் என்று ஸூசநத்தில் தாத்பர்யம். நாடக முடிவில் 'வக்தா ச்ரோதா வசந விஷயঃ ஸ்ரீயதாம் வாஸுதேவঃ' என்று இது தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கிறது. மத்ஸ்யாவதாரத்தோடு சேர்ந்த வாஸுதேவ மூர்த்தியான ஹயக்ரீவனை முதலில் ஸ்மரித்து விட்டு, பிறகு வாஸுதேவனுடைய பத்து மூர்த்திகளும் இந்த ச்லோகத்தில் ஸ்மரிக்கப் படுகின்றன.

வேதாந்தத்தை ச்ருதியினுடைய சிரஸாகச் சொல்லுவதற்குப் பதிலாக ச்ருதியினுடைய கிரீடமென்று சொல்லியிருப்பதற்கு 'முடிச்சோதி'யில் போலே சுடர் மிகுந்த சுருதியின் சிரஸே கிரீடமாக மலர்ந்ததோ என்று பாவம். ரத்நமயமான ச்ருதி, கிரீடத்தில் விளையாடும் புத்தியினுல் நாடக மார்க்கத்தை நல்ல மணமுடையதாகச் செய்கிறது; விவேகமே அரசனும். நாயகனுமாக வைக்கப்பட்டு, பெரியோர்களுடைய தர்சநம் முதன்மையாகக்

காட்டப்படுகிறது. 'யியா' என்பதை 'விவெக ஊவவூயநு' என்பதுடன் சேர்த்து அந்வயித்து, 'நாயகியான ஸுமதியை நாயகனான விவேகன்' என்றும், 'கொள் கொம்பில் சேர்த்து' என்றும் அர்த்தம் கொள்ளலாம். மற்ற நாடகங்கள் துர்வாஸனையால் தோஷமுள்ளவை. அவற்றில் வேதாந்த வாஸனையை ஏற்றி நாடக மார்க்கத்தைச் சிறப்பாகச் செய்திருக்கிறது.

'குஶலாঃ குஶீலவாঃ' என்பதில் ஒரு வேடிக்கை. 'யயா வ்யாகரதி ஸம்யாந குஶலாவெஷு குஶீலவாঃ' என்கிற லக்ஷண வாக்யத்தில் குசலர்கள் தான் குசீலவர்கள் என்று கூறப்பட்டது ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது. குசலவர்கள் குசீலவரானார் என்று ராமாயணம். குசலவர்கள் குசீலவர்கள் என்று இங்குக் கூறப்படுகிறது, நடர்கள் கண்களையும் கைகால்களைப் போலவும் சரீராவயவமாகி இட்டது சட்டமா யிருக்கிறார்கள் என்று நடிசொல்லுகிறாள். இதனால் லோக த்ரய ஸூத்ரதாரனாகிய ஈச்வரனுக்குப் பல வேஷமெடுத்து ஆடும் நாம் சரீரம்போல் யதேஷ்ட ப்ரேர்யராய் இருக்கிறோமென்று ஸூசிதமாகிறது. சரீர சரீரிபாவத்தின் ஸ்வாரஸ்யம் அநுபவத்திற்கு வரும்படி முதலிலேயே காட்டப்படுகிறது.

நாடகத்தில் நல்ல பாத்ரங்களும் உண்டு; கெட்ட பாத்ரங்களும் உண்டு. கெட்ட பாத்ரங்கள் கெடுதலையே நன்றாய் நடிக்கவேணும்; நல்ல பாத்ரங்கள் நன்மையையே நன்றாய் நடிக்கவேணும். காமம், ரதி, கோபம், கர்வம், அஹங்காரம் முதலிய கெட்ட குணங்களே பாத்ரமாக மூர்த்தீகரித்துவிட்டால் அவற்றைவிட ச்லாக்யமாகக் கெட்ட குணங்களை யார் நடிக்கமுடியும்? நல்ல குணங்களே நல்ல பாத்ரங்களாக அமைந்துவிட்டால் அந்தக் குணங்கள் லோகோத்தரமாக நடிக்கப்படுமன்றோ? இந்த ஸௌகர்யம் இந்த நாடகத்தில் உள்ளது என்பதைக் காட்டுகிறார் நம் ஸ்வாமி. இந்த அத்யாத்ம நாடகத்தில் அந்தந்தக் குணங்களின் அதிதைவதங்களும் நாடக பாத்ரமான குணங்களாக வருகின்றன. அத்யாத்மத்தோடு அதிதைவதம் சேர்வது உசிதமல்லவா என்று ஸ்வாரஸ்ய ஸூசகம். விவேகத்தையுடைய ஒரு உயர்ந்த புருஷன் நாயகனாவான். விவேகனே நாயகனாய் விட்டால் அவனிலும் சிறந்த நாயகனுண்டோ? இப்படி நாயகன் ஏற்படுத்துவது அத்யாத்ம நாடகங்களில் மட்டில் உள்ள நவீனமான சமத்காரம். விவேகன் முதலில் கெட்ட குணங்களோடு யுத்தம் செய்யும்பொழுது ரணவீர ரஸம் ஏற்படுகிறது. அந்த வீர்யத்தால் கார்யம் ஸித்திப்பதில்லை. அதற்கு உதவியாய்ப் பரப்ரஹ்மத்தின் அநுக்ரஹ ஸஹாயம் வேணும். அங்கே தயாவீர ரஸம். தயாவீரனான ஈச்வரனுடைய யத்நமில்லாமல் ரணவீரனான விவேகனுடைய ப்ரயத்நம் பலிக்காதென்று காட்ட ரணவீர வ்யாபாரத்திற்கு அடுத்துத் தயாவீர மஹிமை இரண்

டாம் பாதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தயாவீரனுடைய தயை ப்ரகடிதமானவுடன், ஜீவனுக்கு ப்ரபோதம் உண்டாகிச் சாந்த ரஸம் வருகிறது என்று மூன்றாம் பாதத்தில் காட்டப்படுகிறது. இப்படி இரண்டு விதமான வீரரஸத்தைக் காட்டி, அதன் பலமாகச் சாந்தி ரஸத்தைக் காட்டும்பொழுது, முக்குண ரஸத்தில் முழுகினவர்களுக்குக்கூட மெல்ல மெல்ல சாந்தி ரஸம் ருசிக்கும். புராதநமான ரத்நம் போன்ற நாடகங்கள் எத்தனையோ இருந்தாலும், அவை கௌஸ்துப ரத்நம் போலாகுமா? கௌஸ்துப ரத்நம் போன்ற ஜீவனை ஸஜீவமாகப் பண்ணக்கூடியது இந்த நாடகம். கௌஸ்துப மணி என்பது லக்ஷ்மிக்கு ஸந்தோஷம் (அல்லது முகோல்லாஸம்) உண்டாகக்கூடிய முகக் கண்ணாடியாகும். 'வ்யாஹார்ஷீத் ஸ்ரீவத்ஸம் லக்ஷ்மீ விப்ரமதர்பணம் । கௌஸ்துபாக்யம் அபாம் ஸாரம்' என்று ரகுவம்சத்தில் சொன்னதை அநுஸரித்து மிகவும் உயர்ந்த பாவங்கள் இங்கே வெளியிடப்பட்டிருக்கின்றன. லக்ஷ்மிக்கு விளையாட்டு முகக் கண்ணாடி என்று ஜீவ தத்வமான கௌஸ்துபத்தைச் சொன்னதினால், புதிது புதிதாகப் ப்ரதிக்ஷணம் வெவ்வேறு சுத்தமான கண்ணாடிகளை லக்ஷ்மி வஸிக்கும் திருமார்பில் ஈச்வரன் கொண்டுவந்து கொடுத்தால் அவளுக்கு மிகுந்த ப்ரீதி ஏற்படுமல்லவா? அவள் ப்ரீதிக்காகப் புதிது புதிதாக அழுக்குக் கண்ணாடிகளான ஸம்ஸாரி ஜீவர்களை அழுக்கெடுத்து முக்தர்களாக்கித் திருமார்புக்குக்கொண்டு வந்து லக்ஷ்மிக்குப் புதுபுது கண்ணாடியாக ஸமர்ப்பிக்கவேண்டிய ஆவச்யகதை ஏற்படுகிறது. ஸீதாமுக கமலத்தை உல்லாஸநம் பண்ணுகிறது ஸேது என்னும் திருவணை என்று ஆளவந்தார் ஸாதித்ததை அநுஸரித்து, 'வஜோஜ்ஜ்வல' என்று இங்கே ப்ரயோகம். கௌஸ்துப காந்தியால் பூசப்பட்டது ஸ்ரீவத்ஸம் என்னும் மறு என்று காளிதாஸன் சொன்னான். அதுவே இங்கு ஸ்ரீவத்ஸமென்னும் கூச்சுப்பெரையில் விளக்குப் போல் விளங்கும் கௌஸ்துபம் என்று சொல்லப்பட்டது.

இந்த நாடக விஷயமாய் 'வ்யாபார' என்கிற சப்தம் அடிக்கடி ப்ரயோகிக்கப்படுகிறது. நாடக ஸாமாந்யத்தை ப்ரயோகமென்று சொல்வது வழக்கமானாலும் இந்த நாடகத்தை 'ப்ரயோகம்' என்று சொல்வது ஸத்யமாகும். இது ப்ரக்ருஷ்டமான யோகம். இந்த ப்ரக்ருஷ்ட யோகத்தை யோகியல்லாதார் எப்படி ரஸிப்பார்கள் என்பதை 'வ்யாபாரவ்யாபிந:' என்று கூறப்போகிறார் மேல். இந்த ப்ரயோகத்தைக் கவி கருணையால் செய்தார். 'கவிநா' என்பதினால் 'நாடகாந்தம் கவித்வம்' என்கிற வசநத்தை அநுஸரித்துக் கவி என்ற பிருதையுடையவர் எப்படி நாடகம் செய்யாமல் இருக்கக்கூடும் என்பது ஸூசிக்கப்படுகிறது. நாடகம் செய்தால் வேதாந்த நாடகத்தைத் தவிர வேறு எந்த நாடகத்தை வேதாந்தாசார்ய

ஞன கவி செய்யக்கூடும்? 'வேதாந்த நாடகம் செய்தால் வேதாந்த ரஹஸ்யம் முழுவதும் அம்பலத்திற்கு வந்து விடுமே? த்ருச்ய காவ்யத்தில் எல்லோருக்கும் ப்ரகாசமாய் விடுமே?' என்று ஆக்ஷேபம் வந்தால், எல்லையில்லாத கருணையால் இப்படிச் செய்ய நேர்ந்தது என்று 'காருணிகேந' என்பதினால் ஸூசிக்கப்படுகிறது. ஸகலகலாவைசகவிஜிதரானுர் நம் தேசிகன். அவரிடத்தில் பஹுமானத்தால் 'வக்ஷ்வாதாநஹிஜூா' என்று பின்னால் வர்ணிக்கும் பரிஷத்து நம்மிடத்தில் கூட பக்ஷபாதத்தை ப்ரகடநம் செய்கிறது என்று நடி சொல்லுகிறாள். நாடகம் செய்த இவர் தம்முடைய வம்சம் பிறப்பு வித்யை முதலியவற்றை இந்த நாடகத்தைச் செய்வதற்கு அநுகூலமாகக் காட்டுகிறார். பாட்டனார் புண்டரீகாக்ஷர்; அவர் ஸோம ரஸத்தைப் பிழிந்து எடுத்து பாநம் செய்தலும், பாநம் செய்வித்தலும் செய்பவர். அவர் பேரன் சாந்தி ரஸத்தைப் பிழிந்து பாநம் செய்விப்பவர். தகப்பனார் அநந்தஸூரி. ஸூரி யென்றால் கவி. 'வூவை ஊஹாிஹி:' என்கிற காளிதாஸனுடைய பதத்திற்குப் பூர்வ கவிகள் என்று அர்த்தம்.

விச்வத்துக் கெல்லாம் நாமரூப வ்யாகரணம் செய்த பெரிய பெருமாள் இவருக்கு 'வேதாந்தாசார்யன்' என்கிற பெயரை யிட்டான். 'வெஷாஜ்ஞாஸாய உவஷ:' என்பதற்கு 'வேதாந்தாசார்யன்' என்கிற ரூடமான சப்தம் என்றும் அர்த்தம். 'கவிதார்க்கிக ஸிம்ஹம்' என்கிற அடுத்த பிருதத்தை 'ஜாணவலஊாவஹூா' என்று சொல்வதினால் முன் பதம் ரூடியான பெயர் என்று ஸூசிக்கப்படுகிறது. இது எந்த ராஜா கொடுத்த பட்டம் என்றால் ஸ்ரீ ரங்கராஜன் என்று பதில். ஸ்ரீ ரங்கராஜன் நாடக பூமிக்கு ராஜா. அந்த ராஜா வேதாந்தாசார்யனென்று பெயர் கொடுத்தால் அவனுடைய ரங்கத்தில் வேதாந்தம் நர்த்தநம் பண்ணும்படி ஒரு நாடகம் செய்வித்தால் தான் அந்தப் பெயர் அந்வர்த்தமாகும் என்று பாவம். ரங்க ஸம்பந்த மாகிறது வேதாந்தாசார்யத்வம். அதிகாணஸாராவளி செய்வதாலுங்கூட அந்தப் பெயர் இப்படி ஸத்யமாகாது. தமது பெயராகிய 'வெංகட' சப்தத்திற்கு அநுகுணமாக ஸர்வ தந்த்ரங்களின் ஸங்கடங்களையும் தீர்க்கும் விசங்கடம், அல்லது விசாலமான மதியுடையவர் தாம் என்று கூறுகிறார்.

சில கவிகள் ஒவ்வொரு ரீதியில் மட்டும் குசலர்களா யிருப்பார்கள். காளிதாஸனுக்கு வைதர்ப்ப ரீதிதான் ப்ராயிகம். கௌடரீதி அவனிடத்தில் அகப்படாது. இந்தக் கவியினிடத்தில் அந்தந்த ரஸத்துக்குத் தகுந்தபடி எல்லா ரீதிகளும் எல்லா வ்ருத்திகளும் மாலையாகத் தொடுக்கப்பட்டிருக்கின்றன. இவருடைய ஸரஸ்வதியின் மணத்தை மணமறிந்தவர் அறிவார்.

ஸரஸ்வதியைச் சொன்னதும் ஸாவித்ரியின் ஸ்மரணம் வருகிறது. அவளுடைய ப்ரஸ்தாவம் அடுத்த ச்லோகத்தில். முதலில் கவிக்கு வேண்டிய ரீதி மஹிமையைச் சொல்லிற்று. ரீதிகளும் வ்ருத்திகளும் காவ்யத்திற்குச் சரீரம் அல்லது உடலாகும்; அதற்கு ரஸம் உயிராகும். சாந்தி ரஸம் பரிசயமில்லாத தல்லவா? அது அப்ரஸித்தமன்றோ? அதை ரஸமாகக்கொண்டு நாடகத்தை எப்படி த்ருச்ய மாக்குகிறது? புதிதானதும் லோகப்ரஸித்தமல்லாததுமான அபூர்வ ஸ்ருஷ்டியைச் செய்ய வல்லமையுடையவர் குலம் இவர் குலம். வேறொரு இந்த்ரனை வைத்து வேறு ஸ்வர்க்கம் ஸ்ருஷ்டிக்க ஆரம்பித்தார் இவர் குலத்தலைவராகிய விச்வாமித்ரர். இந்த்ரன் எப்படித் தேவர்களுக்குத் தலைவனோ அப்படி நாடகத்துக்குத் தலைமையானது ரஸம். இவர் தமது குடிப்பிறப்பாலேயே புதிதான ரஸத்தை (அதாவது அங்யரஸத்தைத்) தலைமையாகக் கொண்டு நாடகம் கல்பிக்க வலிமையுடையவர்.

(தொடரும்.)

ஸ்ரீ:

# ஸ்ரீராமாநுஜாசார்யரும் ஸ்ரீகண்டாசார்யரும்

[ஸ்ரீ உப. வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.]

(மஞ்சிகை 2 பக்கம் 46 தொடர்ச்சி.)

பாசுபதாதிகரண ஸ்ரீ பாஷ்யத்தில் ‘നിമിത്തോപാദാനയോർഭേദം നിമിത്തകാരണം തു പശുപതിരാ ആശ്രിതേ’ என்றும், ‘പശുപതേ നിമിത്ത ഹേതുത്വം’ என்றும், ‘തഥാപി വേദവിരുദ്ധ നിമിത്തോപാദാനഭേദകല്പനാ’ என்றும், சைவர்கள் சிவனுக்கு நிமித்த காரணத்வ மாத்ரத்தை அங்கீகரித்திருப்பதாக ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச் செய்திருக்கிறார். இந்த விஷயத்தை ஸ்ரீ கண்டாசார்யர் ஷ்டி அதிகரணத்தில் ‘ശിവാഗമൈകദേശേ ശിവസ്യ പരബ്രഹ്മണഃ കേവലം നിമിത്തത്വ പ്രതിപാദിതം; തദ്വിരോധപരിഹാരായ ഉപാദാന കാരണമിതി ശൈവാഗമാഭാസാനാം വ്യാവൃത്തി’ என்று ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸூக்திகளையே அநுவதித்திருக்கிறார். தவிரவும், ‘പരമേശ്വരസ്യ ശ്രുതിസിദ്ധ ജഗദുപാദാന കാരണത്വസ്യാപി തദാഗമനിഷ്ഠാഃ തത്താദൃശവ്യവഹാര ഹിജ്ഞാഃ ഏകദേശിനസ്താന്ത്രികാഃ കേവലം നിമിത്തത്വം വദന്തി’ என்று பாசுபதர்கள் சொல்லுவதாக ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்ததை ஒப்புக் கொண்டு ‘அவர்கள் சைவமதம் தெரியாதவர்கள்’ என்று சொல்லிவிட்டு, ‘സ്വയോഗാന

கெவது ஈஶ்வரொ நிமித்தமித்யாகமம் ஈஶாநு:' என்று சிவனுக்கு உபப காரணத்வ முண்டென்று தமது ஸித்தாந்தமாக ஸ்ரீ கண்டா சார்யர் சொல்லியிருக்கிறார். ஆகையால் ஸ்ரீகண்டபாஷ்யம் பிந்தி உண்டானது. ஸ்ரீகண்டபாஷ்யத்துக்கு ஸ்ரீபகவத் ராமாநுஜ பாஷ்யம் பிந்தி இருக்குமானால் ஸ்ரீகண்ட பாஷ்யத்தில் சொல்லுகிற சிவனுக்கு உபாதாந காரணத்வாதிகளையும், 'யதா வஹுப்ரஹ்ம ப்ரணவ வஹாக்ஷீ ப்ராஸாதாதி ஸம்ஸ்த்ராணாம் வஶாவதி வாஶாதி வஸ்து வஸ்வஹாராணாம் ஹஸ்தௌ ஸமைஞ த்ரிவாணயாராணமிம்மாஷிஞ ராஉாக்ஷ யாராணாதி வாரயஉராணாம்' என்று ஸ்ரீகண்டாசார்யர் சொல்லியிருக்கும் சைவலிங்கங்களையும், சைவாகமத்துக்கு வேத துல்ய ப்ரமாணத்வத்தையும் அநுவதித்துத் தூஷிக்காமலிருக்கமாட்டார் என்பதும் ஸர்வ ஸம்ப்ரதிபந்நமான விஷயம். இங்கு 'விப்ரதிஷெயாது' என்கிற ஸூத்ரத்தில் மற்றொரு வ்யாக்யாநங்களிலும் அங்கீகரிக்கப்படாமலும் ஸ்ரீ பகவத்ராமாநுஜ பாஷ்யத்தில் மட்டும் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் 'விப்ரதிஷெய' சப்தத்தினுடைய நிஷேதார்த்தத்தை சப்த ஸ்வாரஸ்ய விருத்தமென்று ஸ்ரீகண்டாசார்யர் அபிப்ராயப்பட்டு 'வஷவஉராஆயெஉ: கஷுஷிதம்' என்று முதல் ச்லோகத்தில் சொன்னதாகத் தீக்ஷிதர் சிவார்க்கமணி தீபிகையில் எழுதியிருப்பதும் ஸ்ரீபாஷ்யம் முந்தினதென்பதற்கு முக்யமான ஹேதுவாகிறது. இதை முன்பே சொல்லியிருக்கிறோம்.

ஆநுமாநிகாதிகரணத்தில் 'விஜ்ஞாந ஸாரயி யஉஸ்து உநஃப்ரஹ வாஹுர:। ஸொஷ்வந: வாரஉாவொதி தவிஷ்ணொ: வரஉம் வதம்' என்கிற கடவல்லி ச்ருதியில் ஸம்ஸாராத்வாவினுடைய பாரபூதம் விஷ்ணுவினுடைய ஸ்ரீவைகுண்ட ஸ்தாந விசேஷமென்று ஸ்ரீ பாஷ்யத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச் செய்திருப்பதைக் கண்டிப்பதற்காக ஸ்ரீகண்ட பாஷ்யத்தில் 'உநாவதுஸ்வாகு' என்கிற ஸூத்ரத்தில் 'ப்ரஹ்மவிஷ்ணாதி வஉஉக்ரா தவிருக்ஷணக்வெந ஶிவஸ்ய வரப்ரஹ்மண: வஉம் வாராணம்ஆஹி வஸ்நக்தி' என்று சிவ தர்மோத்தர புராண வசநத்தை எழுதி விஷ்ணு ஸ்தாநத்தைக் காட்டிலும் விலக்ஷணமான சிவ லோகமே முக்த ப்ராப்யமான ஸ்தாநமென்றும், 'வராதுஉதரொ ப்ரஹ்மா தவஸாகு வரதொஹரி: । தவஸாகு வரதொஶிவ:' என்பது முதலான ப்ரமாணங்களினால் ப்ராக்ருதி மண்டலத்துக்கு மேலிருப்பது சிவலோகமென்றும் சொல்லிவிட்டு, கீழ் உதாஹரித்த கடவல்லி வாக்யத்துக்கு 'விஷ்ணொ: வரஉம் ஸ்வரூவம்ஹி வரஉா காஶாவஸ்யம் ஶிவஸ்தாநம்' என்று விஷ்ணுவினுடைய திவ்யாத்ம ஸ்வரூபத்தைச் சிவனுடைய வாஸஸ்தாந விசேஷமாகத் தீர்மானித்திருக்கிறார்.

ஸ்ரீபகவத் ராமாநுஜ பாஷ்யமானது பிந்தி உண்டானதாக இருக்குமானல் ஸ்பஷ்டார்த்தமான ச்ருதி ப்ரதிபந்நமான அர்த்தத்தைத் தாமஸ புராண வாக்யத்தைக் கொண்டு தூஷித்திருப்பதை ஸ்ரீ பாஷ்யகாரர் கண்டிக்காமலிருப்பாரா? ச்ருதப்ரகாசிகையிலும் இந்த ப்ரதாந அர்த்தங்கள் அநுவதித்துத் தூஷிக்கப்படாமையினல் ஸ்ரீகண்ட பாஷ்யமானது ச்ருதப்ரகாசிகையின் காலத்திற்கும் பிந்தினதென்றே நிச்சயிக்க இடமாகிறது. ஸ்ரீ பகவத் ராமாநுஜ பாஷ்யத்துக்கும் ஸ்ரீகண்ட பாஷ்யத்துக்கும் பௌர்வாபர்யத்தை மட்டும் விசாரிக்க இங்கு நாம் ப்ரவர்த்தித்தபடியால் ஸ்ரீகண்ட பாஷ்யத்தினுடைய ப்ராமாணிகத்வத்தையும் அவர் ஸ்ரீபாஷ்யத்தின் விஷயங்களைத் தூஷித்திருப்பது ஸங்கதமாகுமா ஆகமாட்டாதா என்பதையும் மற்றும் ஷி க்ரந்த கதமான தோஷங்களையும் இங்கு விசாரிப்பது ஆவச்யகமில்லாமல் இருப்பதுடன் பஹு க்ரந்த ஸாத்யமாகையால் அவ்விஷயங்களை இங்கு ஸ்மரிக்கக்கூட இல்லை.

இப்படியே 'அநுபபத்தேஸ்து ந ஶாரீர:', 'தயாநந்ய விஶேஷாச்ச' என்கிற ஸூத்ரங்களிலும் நாராயணனுடைய பரத்வத்தைத் தூஷித்து ருத்ரனுக்கே பரதேவதாத்வத்தை அதிகமான அபிநிவேசத்துடன் ஸமர்த்திக்கிறபடியாலும் ஷி ஸூத்ரங்களில் ஸ்ரீ பகவத் ராமாநுஜ பாஷ்யத்தில் இந்த விஷயம் அநுவதித்துத் தூஷிக்கப்படாததனுலும் ஸ்ரீ பகவத் ராமாநுஜ பாஷ்ய காலத்தில் ஸ்ரீ கண்ட பாஷ்யமிருக்கவில்லை யென்பது வ்யக்தமாகிறது. இது நிற்க, அநேக ஸூத்ரங்களில் ஸ்ரீ பாஷ்ய க்ரந்தத்திலிருக்கும் பங்க்திகளையே கொஞ்சம் விரிவாக எழுதியிருப்பதாலும், ஸ்ரீ பாஷ்யத்தில் ஸுருங்க அருளிச்செய்திருக்கும் அநேக விஷயங்களை விரிவாக எழுதியிருப்பதாலும் ஸ்ரீ கண்ட பாஷ்யம் பிந்தினதென்று ஊஹிக்க இடமாகிறது. இங்கு சில வற்றை உதாஹரணமாகக் காட்டுவோம். ப்ரதமஸூத்ரத்தில் 'அத்ராத ஶப்த ஆநந்தர்யே பவதி' என்கிற ஸ்ரீ பாஷ்ய வாக்யத்தை 'அத்ராத ஶப்த ஆநந்தர்யார்த:' என்றும் 'அத:ஶப்தோ வ்ருத்தஸ்ய ஹேதுபாவே' என்கிற ஸ்ரீ பாஷ்ய வாக்யத்தை 'அத ஶப்தோயம் வ்ருத்தஸ்ய ஹேதுபாவே வர்த்ததே' என்றும் ஸ்ரீகண்டாசார்யர் எழுதியிருக்கிறார். இப்படி ஒவ்வொரு அதிகரணங்களிலும் தன் மதத்திற்கு விரோதமில்லாத இடங்களில் சப்தாநுவாதமும் அர்த்தாநுவாதமும் ஸங்க்ரஹ விஸ்தர பாவங்களினுல் ஆங்காங்கு எழுதியிருப்பதைக் கவனிக்கும் பண்டிதர்களுக்கு ஸ்ரீ கண்ட பாஷ்யமே பிந்தி உண்டானதென்பதை ஷி க்ரந்த ஸந்தர்ப்பங்

களை வ்யக்தமாகக் காட்டுகின்றன. அவைகள் எல்லாம் விஸ்தாரபயத்தினால் எழுதப்படவில்லை.

ஆக, இதனால் இந்த ஸ்ரீ கண்ட பாஷ்யத்தில் ஸ்ரீ பகவத் ராமாநுஜனுடைய திருநாமத்தையோ அல்லது அவருடைய க்ரந்தத்தின் திருநாமத்தையோ குறிப்பிட்டு எழுதித் தூஷிக்காவிட்டாலும் ஸ்ரீ பகவத் ராமாநுஜனால் ஸ்ரீ பாஷ்ய க்ரந்தத்தில் ஸித்தாந்தம் பண்ணப்பட்ட தத்வம் ஹிதம் புருஷார்த்தங்களில் பரதத்வமான ஸ்ரீமந் நாராயணனுடைய பரத்வத்தைப் பலபடியாகத் தூஷித்து பரமசிவனே பரதத்வம் என்று ஸ்தாபித்திருப்பதாலும், பரம்பரயா ஹிதங்களான பஞ்ச ஸம்ஸ்காராதிகளைக் கண்டித்து பஸ்ம ருத்ராக்ஷ த்ரிபுண்ட்ர தாரணங்களை ஹிதமென்று சொல்வதாலும், பாரதாதி ப்ரஸித்த வைபவமான ஸ்ரீ பாஞ்சராத்ரத்தைப் பூர்ணமாக அப்ரமாணமென்றும் பாசுபதாகமத்தை வேத துல்யப்ரமாணமென்றும் சொல்வதுடன் ச்ருதிகளில் ப்ரஸித்தமான ஸ்ரீ வைகுண்டம் மோக்ஷமல்லவென்றும் சிவலோகமே சிறந்த மோக்ஷமென்றும் சொல்லி ஸ்ரீ பாஷ்ய ஸித்தாந்திதமான அர்த்தங்களையே அநுவதித்துத் தூஷித்திருப்பதாலும் ஸ்ரீ பகவத் ராமாநுஜ க்ருதமான ஸ்ரீ பாஷ்யம் முந்தி அவதரித்ததென்றும் அதைத் தூஷிக்கும் ஆஸ்தையினால் ப்ரவர்த்தித்த ஸ்ரீ கண்ட பாஷ்யம் பிந்தி உண்டானதென்றும் இவ்விரண்டு க்ரந்தங்களை ஆபாத ஸூக்ஷ்மம் பராமர்சித்த பண்டித ரத்நங்கள் அங்கீகரிப்பார்கள். ஸ்ரீபாஷ்யம் ச்ருதப்ரகாசிகை ஸ்ரீ தேசிக க்ரந்தங்களிலும் கூட இந்த ஸ்ரீகண்ட பாஷ்யம் அநுவதித்துத் தூஷிக்கப்படாமல் பிறகு ஸ்ரீ தொட்டையாசார்யர் அருளிச்செய்த பாராசர்ய விஜயம் தொடங்கி திருவிசைநல்லூர் மஹாமஹோபாத்யாயர் ராமஸுப்பா சாஸ்த்ரிகளால் செய்யப்பட்ட காயத்ரீ தத்வார்த்த விலாஸம் அந்தராதித்யாதிகாண விலாஸம் மஹா சைவ மத மர்த்தநம் முதலிய க்ரந்த பர்யந்தங்களான அதுநாதந க்ரந்தங்களில் இந்த ஸ்ரீ கண்ட பாஷ்யமானது ஒவ்வொரு அவயவமும் அநுவதித்துத் தூஷிக்கப்பட்டிருப்பதால் ஸ்ரீ தேசிகனுடைய காலத்திற்குப் பிறகு தீக்ஷிதரோடு ஸமாந காலஸ்தரான ஸ்ரீதொட்டையாசார்யர் காலத்துக்கு முந்தி ஸ்ரீ கண்டாசார்யர் இருந்திருக்கலாமென்று ஊஹிக்க இடமுண்டாகிறது.

தவிரவும், ஸ்ரீதேசிகன் காலத்திற்குப்பிறகே ஸ்ரீ கண்டரின் காலம் இருக்கவேண்டும் என்பதற்கு இன்னுமொரு ஹேது இருக்கிறது. ஸ்ரீகண்டர் சரீராத்ம பாவத்தை ஒப்புக்கொண்டவர். ஸ்ரீ தேசிகன் தமது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ப்ரதாந ப்ரதி தந்த்ராதிகாரத்தில் சரீராத்ம பாவஸம்பந்தத்தை மற்ற ஒரு ஸித்தாந்திகளும் ஒப்புக்

கொள்ளவில்லையென்று எழுதியிருக்கிறார். ஸ்ரீ கண்டரின் காலம் ஸ்ரீ தேசிகனுடைய காலத்திற்கு முந்தியிருக்கும் பக்ஷத்தில் ஸ்ரீ தேசிகன் இம்மாதிரி எழுதியிருப்பாரா என்பது கவனிக்கத்தக்கது.

ஸ்ரீமத்ராமாநுஜமுநே: ஸ்ரீகண்டார்யஸ்ய பாஷ்யயோ: ।
ஸ்ரீநிவாஸார்யவிதுஷா ஸூக்ஷ்ம வைஷம்யம் நிரூபித: ॥

---

ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஸிகாய நம: ॥

# ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிக கவிதா விஷய விமர்சம்.

[ஸ்ரீ உப. வித்வான் த. வே. ஸ்ரீநிவாஸாசார்யர், ந்ருஸிம்ஹபவநம், திருச்சி.]

(ஸஞ்சிகை 2 பக்கம் 54 தொடர்ச்சி.)

---

யாதவாப்யுதய காவ்யத்தைப் பரிசீலநம் செய்வோம். இது ஒரு மகா காவ்யம். இது 24 ஸர்க்கங்கள் கொண்டது. "ஸர்கபந்தோ மஹாகாவ்யம் தத்ரைகோ நாயக: ஸுர: । ஸத்வம்ஸ: க்ஷத்ரியோ வாபி தீரோதாத்தகுணாந்வித: । ஸ்ருங்காரவீரஸாந்தாநாம் ஏகோங்கீ ரஸ இஷ்யதே । நகராணவஸைலர்துசந்த்ரார்கோதயவர்ணநம் । உத்யாந ஸலிலக்ரீடா மதுபாந ரதோத்ஸவா: । விப்ரலம்போ விவாஹஸ்ச குமாரோதயவர்ணநம் । மந்த்ரத்யூதப்ரயாணாஜி நாயகாப்யுதயா அபி । வர்ணதாநி யத்ர வர்ண்யந்தே தந்மஹாகாவ்யமுச்யதே ।" என்கிற லக்ஷணம் இந்த க்ரந்தத்திற்குப் பொருந்தி யிருப்பதால் இது ரஸஸ்ரோத: ப்ரஸாரணத்திற்கு நிதாநமான மஹாகாவ்யம்.

திங்மாத்ரம் இது உதாஹரிக்கப்படுகிறது. ஒன்பதாவது ஸர்க்கத்தில் 'சதுராநநஷட்வதித: ஸ்வயம் உபேந்த்ரஜிஹ்வாநநஷட் ஹவிஷ்காம் வஹநு। சுவஸ்யா நஹிஹந்த்ய ஈஹதே ஜகதீயோபசாரபலயாவந: ॥ ஸ்ருதிஸௌரபஸௌ பாக்யா கிரா ஸ்வயமேவ வேஷ சந்த்ரவேதந ஸமேதயா । ப்ரபயேவ நாக

ஸம்ஜ்ஞம் வ-ஈ-ஷ: வ-க்ஷரஹொஅ஼ஹொ ௨௨ ॥ '' என்று பாவகர்ப்ப முள்ளதும் ரஸாலங்கார பாகங்களால் நிறைந்ததும் ப்ரஸாத மாதுர்ய குணங்களால் அலங்கரிக்கப்பட்டவைகளும் லலித ரசனா நிபத்தங்களாகவுமிருக்கிற இப்படிப்போன்ற பத்ய ரத்நங்களால், ரகுவம்சம் குமாரஸம்பவம் க்ருஷ்ண விலாஸ காவ்யம் இவைகளை அதிக்ரமித்து இந்தக் காவ்யம் ப்ரகாசிக்கிறது. ரமணீயங்களான வியோகிநீ முதலிய வ்ருத்தங்களாலும் ச்ரவணாநந்த மதுப்ரவாஹவர்ஷியான லலித லலித சப்த ஜாலங்களாலும் நவ நவ கவி ப்ரதிபோதப்ரேக்ஷிதங்களான ஸாரதமார்த்தங்களாலும் அதி ஸுகுமார ச்ருங்கார கருண ரஸாநுகுணமான வைதர்ப்பீ ரீதியினாலும் அத்யுத்ததங்களான ரௌத்ரீ பீபத்ஸ ரஸாநு குணமான கௌடீ ரீதியினாலும் கிஞ்சித் ப்ரௌடங்களான வீரபயாநக ரஸாநுகுணமான பாஞ்சாலீ ரீதியினாலும் கிஞ்சித் ஸுகுமாரங்களான ஹாஸ்ய சாந்த அத்புத ரஸங்களுக்கு அநுகுணமான மத்யமாரபடீ வ்ருத்தியினாலும் அநுப்ராஸ யமக ப்ரப்நதி சப்தாலங்காரங்களாலும் உபமோத்ப்ரேக்ஷா முதலிய அர்த்தாலங்காரங்களாலும் சப்த சித்ரங்களாலும் வாச்யாதிசாயி வ்யங்க்யார்த்தங்களாலும் வ்யஜ்யமாந ரஸாலங்கார வஸ்துக்களால் உபஸ்க்ருதங்களான சப்தங்களாலும் கவி ப்ரௌடோக்திகளாலும் அகண்ட பரிபூர்ண ப்ரஹ்மாநந்த ஸப்ரஹ்மசாரியான விகளித வேத்யாந்தர பரமாநந்தத்தைப் பெருக்கி ஸஹ்ருதய ஹ்ருதயோல்லாஸத்தை உண்டுபண்ணும் திறமை வாய்ந்ததாக இருப்பதால், த்வநி சப்த வ்யபதேச்ய காவ்ய சிரச்சேகரமாக இந்த யாதவாப்யுதயம் ஜ்வலிக்கின்றது.

ஸங்கல்ப ஸூர்யோதய நாடகத்தைச் சற்றுப் பர்யாலோசனை செய்வோம். 'நாடகாந்தம் கவித்வம்' என்று ஆலங்காரிகர்கள் உத்கோஷிக்கின்றனர். அதற்கு யாது கருத்தென்று வினவப்படுமேயாகில், ஸர்வ சாஸ்த்ரங்களிலும் ஸம்யக் பரிசயமிருந்தாலொழிய நாடகம் ஒருவராலும் செய்ய இயலாது என்பதே அதற்கு உத்தரமாகும். ஸர்வதோ முகமான பாண்டித்யமொன்றே நாடக ப்ரணயநத்தில் அஸாதாரண காரணமாக இருக்கிறது. ஸ்வாமி தாமே இந்த விஷயத்தைத் திருவுள்ளம் பற்றி நாடகத்தில், "ந த஦ாஹஸ்ரம் நஸா விஷ்யா நத஦ிஷஂ ந தாஃ கலாஃ । நாஸௌ யொமொ நதஜ்ஞாநம் நாடகெ யஞ த்ருமயதெ ॥ '' என்று அருளிச்செய்தார். தவிரவும் நாடக ப்ரணேதாவுக்கு ப்ராக்ருதம், மாகதீ, சௌரஸேநீ, அபப்ரம்சம், பைசாசீ, சூளீ, காபைசாசீ, மாஹாராஷ்ட்ரீ, லாடீ, கௌடீ, சாண்டாளீ, காண்டோலீ, புக்கஸீ, சாகாரீ, அவந்தீ அர்த்தமாகதீ முதலிய ஸம்ஸ்க்ருத பாஷா விக்ருதிகளான ப்ராக்ருத பாஷைகளில் பரிபூர்ணமாக ப்ரஜ்ஞை இருக்கவேண்டும். ஸ்வாமிக்கு ஸமஸ்த பாஷைகளிலும் அநிர்வசநீயமான

பாண்டித்யம். இந்த விஷயத்தில் 'सहस्रशेषभाषावेदी तत्र तत्र भाषया विताकिञ्चनतानु प्रतिक्षेपशक्तिः' என்கிற ஸ்வாமியின் வசநமே ப்ரமாணம். மேலும் அதிதர ஸாதாரணமான பாண்டித்யமும் வைதக்த்ய முமிருக்கவேண்டும். இதைப் பவபூதியானவன் தன்னுடைய க்ருதியான மாலதீமாதவமென்கிற ப்ரகரண க்ரந்தத்தில் "यद्वेदाध्ययनं तथोपनिषदां सांख्यस्य योगस्य च ज्ञानं तत्कथनेन किं नहि ततः कश्चिद्गुणो नाटके । यत्प्रौढत्वमुदारता च वचसां यच्चार्थतो गौरवं तच्चेदस्ति ततस्तदेव गमकं पाण्डित्यवैदग्ध्ययोः" என்று சொன்னான். ப்ரௌடத்வமாவது, விவக்ஷிதார்த்த ஸமர்ப்பண ப்ராவீண்யம். அல்லது 'पदार्थे वाक्यरचना वाक्यार्थे च पदाभिधा । प्रौढिर्व्याससमासौ च साभिप्रायत्वमस्य च ॥" என்பது. ஔதாயர் மாவது, ப்ரபந்த ஸௌந்தர்யம். அல்லது ச்லாக்யார்த்தத்தோடு கூடி இருத்தல். அர்த்த கௌரவமாவது: அநேகார்த்த ப்ரதிபாதந ஸாமர்த்யம். இவ்வளவு இருந்தால்தான் நாடக கர்த்தாவுக்குப் பாண்டித்யமும் வைதக்த்ய மும் புஷ்கலங்களாக இருக்குமென்று அறிந்து கொள்ளலாம். ஸ்ரீ ஸ்வாமி யின் திவ்ய ஸூக்திகளில் கவி ஸமய ப்ரஸித்தங்களான ஸர்வவித ரஹஸ்ய தத்வங்களும் குடிகொண்டிருக்கின்றன. காளிதாஸனுக்கு ச்ருங்கார கருண ரஸங்களை லலித லலிதமான வசந பரிபாடியினால் வர்ணிக்கத் திற மையுண்டே ஒழிய வீரரஸத்தையாவது பீபத்ஸ ரஸத்தையாவது ரௌத்ர ரஸத்தையாவது யதாவத்தாக வர்ணிக்க நிஸர்க்க ஸித்தமான பாண்டித்யம் கிடையாது. மாலவிகாக்நிமித்ரீய நாடகத்தில் அபரிசித மான வீர ரஸத்தை வர்ணிக்க உபக்ரமித்து, கிஞ்சித் ப்ரௌடமான வீரர ஸத்திற்கு அநுகுணமாகப் பாஞ்சாலீ ரீதியையும் ஸாத்வதீ வ்ருத்தியையும் ப்ரௌட பந்தத்தையும் அமைக்கத் திறமையற்று வீரரஸ விருத்தமான வைதர்ப்பீ ரீதியையும் பாரதீ வ்ருத்தியையும் ஸங்கடநம் செய்து லலித பந்தத்தினால், 'तमश्वमेधवपुः वरिणस हरजाजुनाय सवाक्षिण्णुरुबलि विंशं करुणवयामि। कोदण्डवाणी निरुद्धस्य प्रतिरोधकानां सवात त्र्यवसहसाविरहं प्रतीकं ॥ '' என்று பத்யநிர்மாணம் செய்து, ஸஹ்ருதய மூர்த்தந்யர்களுடைய அவஹஸநத்திற்குப் பாத்ரமானான். ஸ்ரீஸ்வாமியினு டைய நாடகத்தில் நவரஸங்களும் அநுகுணங்களான ரீதிகள் வ்ருத்திகள் சய்யை பாகம் பந்த விசேஷங்கள் இவைகளெல்லாம் நிலைபெற்றிருக்கின்றன. ச்ருங் கார ரஸத்திற்கு உதாஹரணம் " शौरिं विनोदयति शार्ङ्गिणः करोति......कण्ठाश्रितं किमपि तत्कुचभाषिणीनां नारावि किं न विक

ணோதி நிர்வ்யூடாந்தம் ॥”. அர்த்த ஸந்தர்ப்பம் ஸுகுமாரமாக இருப்பதால் கைசிகீ வ்ருத்தி, பந்த பாருஷ்ய மில்லாமையால் வைதர்ப்பீ ரீதி உள்ளும் புறமும் ரஸபூர்த்தி இருப்பதால் த்ராக்ஷா பாகம்; ப்ரஸாத மாதுர்ய குணங்கள்; நீண்ட ஸமாஸங்களில்லை. வீர ரஸத்திற்கு உதாஹரணம். “ஜயாஶ்ரித தேவதாநவ அஸந்நாவீர ஶாவீததோரார்த்தைர்தா விவேகஶோஹ நரவயோரார்போ யத்நைகேதஸ்ஸே । வேமுக்ஷணந் நிரஸ்வேண ப்ரஹரணோ ஷிஹூஸ்வ ஶாகம்கடம் ஜேதாஸௌ ஜமதூம்யகார்த்திஸிதம் தேவோ விவேகேஶ்வர: ।” இந்த ச்லோகத்தில் ஸாத்வதீ வ்ருத்தி பாஞ்சாலீ ரீதி. உல்லேக விஷயத்திலும் ஆசார்யருடைய பாண்டித்யம் அவாங் மநஸ கோசரமாக இருக்கிறது. உதாஹரணமாக “காத்வஜி ஜ்யோஸ்யேஷு விததா: காஸ்யாத்வதஜ்த்வமே ஶாதம்ஹந்தி ஶஹீயமேஷு ஶயூவத்தோஶஜி ஶஶ்லேஷு ச । ஸ்வஷ்வா நிஸ்ஸ்ந்ந வாணிநா காவமுபாவீஶஜி தே காஙமே யஜிஸ்ஸுஜி நிஶாஶுவேஷு ஸ்தஶுவி ஸ்தாநாஸ்த:வம்க்தய:॥” இதுபோன்ற நூற்றுக்கணக்கான ச்லோகங்கள் கவி சிரோமணியின் உல்லேக சக்தியை விவரித்துக்காட்டுகின்றன. பயாநக ரஸ விஷயத்திலும் உதாஹரணங்கள் பரச்சதங்களிருக்கின்றன. ஸ்தாலீபுலாக ந்யாயத்தால் ஒன்றையே காண்பிக்கிறேன். “உஹ்டகபாயதாஜ்வஶுஹ்த ஹாரஜ்ஜ தஜ்ஜஹ்ரத ஶஜ்ஜம் । ரணஹஶி ஶஜ்ஜமஶஸௌ ஶஜ்ஜமிஹ அரதி ஶோஹதஜ்ஜய: ॥” இதில், ஆரபடீ வ்ருத்தி, கௌடீ ரீதி, விகடாக்ஷரபந்தம், ஸ்வபாவோக்தி, உஜ்வலமான ஓஜோகுணம், ப்ரௌடமான இந்த ரஸத்திற்கு அநுகுணமாக முற்கூறப்பட்டவைகளெல்லாம் இந்த ச்லோகத்தில் ஸாந்நித்யம் செய்கின்றன. அடியேன் எதை எழுதுவேன்! ஸ்வாமியின் கவிதா ஸ்வரூப வர்ணநத்தில் ஸஹஸ்ரமுகனுக விளங்குகிற ஆதிசேஷனே ஸமர்த்தன். ஸங்கல்ப ஸூர்யோதய நாடகத்தில் தன் கவிதா ஸ்வரூபத்தைத் தாமே ‘ஸாலங்காரா ம்ருதுபதமஹாஜ்ஞாநஸாரா ஸரஸ்வதீம் । யஸ்ய நித்யம் ப்ரஸம்ஸந்தி ஸஜ்ஜநா ஸ்ஸஹ்ருதய: ।” என்கிற ச்லோகத்தால் வெளியிட்டார். ஸ்ரீ நிகமாந்த மகாதேசிகன் ஸ்வ ப்ரசம்ஸா பரமாக இருந்தபோதிலும், மிதப்ரஜ்ஞர்களுக்கும் அஸூயா க்ரஸ்த மநஸ்கர்களுக்கும் வாஸ்தவார்த்தத்தைத் தெரிவிக்க எண்ணமுள்ளவராகவே ‘வித்யாஸ ஸம்ஹிதயிரவஹிதோ வேங்கடேஶ: கவீந்த்ர:’ என்று தாமே தன்னுடைய யோக்யதையை எடுத்து உரைத்தார்.

பாதுகா ஸஹஸ்ரத்தில் ஸர்வதோ முகமான கவிதா சக்தியை ஸ்வாமி காட்டி, பற்பல பங்கிகளால் ஆயிரம் ச்லோகங்களைச் செய்தருளியிருக்கிறார்.

" [illegible] ' என்று ஸர்வ வித கவிஸமயாநுஸரண பரிபாடியிலும் வச்யவாக்காக இருக்கிற தமக்குப் புஷ்கலமான பாண்டித்ய முண்டென்பதைக் கண்டோக்தியினால் வெளிப்படுத்தியிருக்கிறார். ஸ்ரீ ஸ்வாமியின் கவநத்தில் ஒரு விசேஷ முண்டு. அதாவது கூரநாராயண ஸ்வாமியின் ஸூக்தி போலவே ஸ்வாமியின் ஸூக்திகளெல்லாம் அர்த்த புஷ்டியுள்ளதாக இருக்க, வ்ருத்யநுப்ராஸரூப மான சப்தாலங்காரத்திலும் ரம்யமான விந்யாஸத்துடன் கூடின சேகாநு ப்ராஸத்திலும் விசேஷமான நோக்கமுள்ளவைகள். இது விஷயத்தில் ஸ்வல்பம் உதாஹரிக்கப்படுகிறது. " [illegible] ॥". சித்ர கவநத்திலும் "ஸ்வாமிக்கு அஸாதாரண பாண்டித்யம் உண்டு. உதாஹரணம்: " [illegible] ॥ " இவை முதலியன தர்சநமாகக் கண்டுகொள்ளத் தக்கவை. இத்யாதி காரணங்களால்

கீர்வாண பாஷாகவிதையில் அஸாதாரண பாண்டித்ய முள்ளவர்களான காளி தாஸன், பவபூதி, ஸ்ரீஹர்ஷன், பாணன், ஸுபந்து, விசாகதத்தன், க்ஷேமேந்த்ரன், பட்ட நாராயணன், தண்டி, முராரி, பாரவி, உடயதேவன், சூத்ரகன், மாகன், வித்யாநாதன் இவர்களைவிட ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் ஸர்வ ப்ரகாரங்களாலும் மேன்மை வாய்ந்தவரென்றே தாஸனுடைய அபிஸந்தி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஹயவதநபரப்ரஹ்மணே நம:

# பிராட்டியின் வைபவம்.

[ஸ்ரீ. உப. வித்வாந் காடந்தேத்தி கோபாலாசார்யர்.]

நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் ச்ரிய: பதியான ஸர்வேச்வ ரன், சேதநதத்வம் அசேதநதத்வம் இவைகளை விட ஸர்வ ப்ரகாரத்தாலும் அத்யந்தம் வேறுபட்டு, அவைகளின் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளுக்குக் காரணமாகி, ஈச்வர தத்வமென்று சொல்லப்படுவதுபோல், பெரிய பிராட்டியாராகிய ஸ்ரீ மஹாலக்ஷ்மியும் அந்தப் பகவானுக்கு விசேஷணமாய் அவாந்தர ஈச்வர தத்வமாகி ஈச்வர கோடியில் சேர்ந்தவளாகிறாள். [எப்படி விஷ்ணு ஸர்வ வ்யாபியோ அப்படி இவளும் ஸர்வ வ்யாபிநீ] என்றும், என்றும், என்றும் பகவானுக்கு அஸாதாரண தர்மமாயிருக்கையாலே பகவானைத் தவிர வேறொரு வஸ்துவுக்கு உரியவளல்லாதவளாகிறாள். எப்படி ஸூர்யனை விட்டு ப்ரபையும், புஷ்பத்தை விட்டுப் பரிமளமும், ரத்நத்தைவிட்டு ஒளியும் பிரியாதோ அதுபோல், 'இறையும் அகலகில்லேன்' என்றும் என்றும் என்றும் ப்ரஹ்மசர்யாபிநயாவஸ்தையிலும் உட்படப் பிரியாமல் தத்விச்லேஷத்தை ஸஹியாமல் இருக்கிறாள்.

இப்படிப் பகவானை நீக்கிப் பிராட்டியும் பிராட்டியை நீக்கிப் பகவானும் தனித்து ஈச்வர தத்வமில்லை. இரண்டும் சேர்ந்த மிதுநமே சேதநர்க்கு உத்தேச்யம். இப்படி இருவரும் சேர்ந்து ஜகத் ரக்ஷணமாகிய யஜ்ஞத்தில் தீக்ஷிதர்களாயிருந்து லோக தந்த்ரத்தை நடத்தி வருகிறார்கள். 'ருத்ரா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்யரூபயா । ரக்ஷக: ஸர்வஸித்தாந்தே வேதாந்தேஷு ச கீயதே' என்று ஹ்ருஷீகேசனான பகவான் க்ருபையே வடிவுகொண்டு பிராட்டியுடன் கூடி ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் முதலிய வ்யாபாரங்களில் அந்வயித்து ரக்ஷகனாகிறானென்று ஸர்வஸித்தாந்தங்களிலும் வேதாந்த சாஸ்த்ரத்திலும் சொல்லப்படுகிறது. இன்னும் இவ்விஷயம் அநேக ப்ரமாணங்களாலும், 'நாநயோர்வித்யதே பரம்' என்று லக்ஷ்மீ நாராயணராகிய இவ்விருவரைக் காட்டில் மேலான தத்வமில்லையென்று ப்ரஹ்மர்ஷியான பராசரராலும் அநேக உபபத்திகளைக் கொண்டு நம் பூர்வாசார்யர்களாலும் நிஷ்கர்ஷிக்கப்பட்டும் வருகிறது. பகவானுடைய ஸ்வரூபத்தை நிஷ்கர்ஷித்துக் காட்டுகிற ஜ்ஞாநம் முதலிய தர்மங்களை விட அஸாதாரண தர்மமாய், அவனுக்கு அப்ருதக் ஸித்த விசேஷணமாய், இருக்கையாலே திருவில்லாத் தேவர்களைக் காட்டிலும் வ்யாவ்ருத்தியைத் தோற்றுவிக்கிற ஸ்ரீயை முன்னிட்டு நம் பூர்வாசார்யர்கள் அனைவரும் ஏக கண்டமாய்ப் பரத்வத்தை நிரூபித்தார்கள். பெரிய முதலியாரான ஆளவந்தார், 'ஸ்ரீரித்யேவ ச நாம தே' என்றும், பட்டர் 'ஸ்ரீஸ்ஸ்ரிய த:' என்றும் அருளிச் செய்தார்கள். பேயாழ்வார் முந்துறப் பகவானை அநுபவிக்கும்பொழுது திவ்யமங்கள விக்ரஹம் திவ்யாயுதங்கள் இவைகளுக்கு முந்தி மற்றெல்லாவற்றையும் விடப் பகவானுக்கு லக்ஷ்மீ அதிசயாவஹமாயிருக்கிறபடியை அநுஸந்தித்துத் 'திருக்கண்டேன்' என்று அருளிச்செய்தார். நம் பரமாசார்யனான நிகமாந்த மஹாதேசிகனும் 'வசரணம் தேஜ: ஸ்பூர்ஜதி பவதீபாதலாக்ஷாரஸாங்கம்' [பிராட்டியின் திருவடியின் செம்பஞ்சுக் குழம்புகளால் அடையாளம் செய்யப்பட்டுப் பகவான் பூர்ணமான தேஜஸ்ஸாய் விளங்குகிறான்.] என்று அருளிச்செய்தார். இதைக் கணிசித்து ஸ்ரீ ஆளவந்தாரும், 'உன்னுடைய பெயர் ஸ்ரீ: என்று ப்ரஸித்தமாயிருக்கிறது; ஆகையால் உன்னை எந்த ஆகாரத்தைக் கொண்டு ஸ்தோத்ரம் செய்வது?' என்று திகைத்தார். அதாவது: அநவதிகாதிசய மாஹாத்ம்யமுடையவள் லக்ஷ்மீ என்று தாத்பர்யம். ஸ்ரீ: என்கிற திருநாமமே அநேக ஆகார பௌஷ்கல்யத்தைக் காட்டுகிறது. ஸ்ரீ: என்கிற பதத்திற்கு ஆறு அர்த்தங்கள் உண்டு. ஸ்ரீயதே, ஸ்ரயதே, ஸ்ருணோதி, ஸ்ராவயதி, ஸ்ருணாதி, ஸ்ரீணாதி என்பன. இவற்றில் 'ஸ்ரீஞ் ஸேவாயாம்' என்கிற தாதுவில் நிஷ்பந்நமான ஸ்ரீ சப்தத்தில், 'ஸ்ரீயதே இதி ஸ்ரீ:' என்கிற கர்மணி வ்யுத்பத்தியால் 'சேத

னர்களால் ஆச்ரயிக்கப் படுகிறாள்' என்று அர்த்தம், 'ஶ்ரயதே ஜயழ (ஜமவம தழ) ஊதி ஶ்ரீ:' என்று கர்த்தரி வ்யுத்பத்தியான பொழுது பகவானை ஆச்ரயிக்கிறாள் என்று பொருள்படும். இந்த இரண்டு வ்யுத்பத்திகளும் பிராட்டியினுடைய புருஷகாரத்தைக் காட்டுகின்றன. பிராட்டியானவள் எம்பெருமானுடன் எப்பொழுதும் இருந்துகொண்டு, அபராதம் செய்கிறவர்களான சேதநர்களைப் பகவானிடத்தில் அபிமுகராகப்பண்ணி, கர்மாநுரூப பலப்ரதனான ஈச்வரனுடைய நிக்ரஹாபிஸந்தியை நிவ்ருத்தித்து, புருஷகாரமாயும், சேதநர்கள் ஆச்ரயிக்கும் வேளையில் தானும் உத்தேச்யமாயிருந்து அவர்களுக்குப் பல ப்ரதானம் செய்கிறவளாயும், ப்ராப்தி தசையில் அடையத் தகுந்தவளாயும் இருக்கிறாள். இதை நினைத்தே 'ஶுகாரத்ரயஸம்பன்னா' என்று லக்ஷ்மி புருஷகாரத்வ உபாயத்வ ப்ராப்யத்வங்களாகிற மூன்று ஆகாரமுடையவள் என்று உடையவருடைய ஸ்ரீ ஸூக்தி ப்ரவ்ருத்தித்தது. இதில் பிராட்டி புருஷகார மென்பதில் ஒருவருக்கும் விவாதமில்லாமையினால், பிராட்டி புருஷகார பாவத்தை வெளியிட்டபடியைக் கொஞ்சம் உபபாதநம் செய்வதாக உத்தேசிக்கிறேன்.

தன்னால் அபேக்ஷிக்கப்பட்ட பல ப்ராப்திக்கு உபாயமாக வரிக்கப்படும் சேதநாந்தரத்துக்குப் புருஷகாரமென்று வ்யவஹாரம். இதை நிகமாந்த மஹாதேசிகன், புருஷகாரமாவது ஸாபேக்ஷனை புருஷனுக்கு அபேக்ஷிதம் தலைக்கட்டிக் கொடுக்கவல்ல ;சேதநன் அபிகம்பனைக்கு உபாயமாக வரிக்கப்பட்ட சேதநாந்தரம்' என்று அருளிச்செய்தார். இதனை நயினாராசார்யர், 'ஸவம் வுருஷகாரஸ்வாவி வடிகஜெதநவிஶெஷஜொக வுவிஸூா வுயஜுத ஊதி ந விரொயஃ' என்றும், பிள்ளை லோகாசார்யரும் 'கடகத்வமே புருஷகாரத்வம்' என்றும் அருளிச் செய்திருக்கிறார்கள். இதை யெல்லாம் நினைக்கும்போது அநாதிகாலமாய் அஜ்ஞாநத்தில் ஆழ்ந்து துன்புற்ற ஜீவ ராசிகளைப் பகவானிடத்தில் சேர்ப்பிக்கையால் இவள் புருஷகாரமாகத் தட்டில்லை.

ஆகையால் பிராட்டியின் புருஷகாரமாகப் பகவானை ஆச்ரயிக்க வேண்டுமே யொழிய, தீரக்கழிய அபராதம் செய்த சேதநர்களிடம் வேறு வழியாகப் பகவான் இரங்கான என்பது ஸூசிச்சிதமாயிற்று. புருஷகாரமாக வேண்டியிருந்தால் அதற்கு இன்றியமையாத குணங்கள் மூன்றுண்டு. அவையாவன :—க்ருபை, பாரதந்த்ர்யம், அநந்யார்ஹத்வம். இவற்றுள் க்ருபையாவது: 'வரஉுஃவ நிராதிகீஷா' [தன்னுடைய ப்ரயோஜநாந்தரங்களைக் கணிசியாமல் பிறருடைய துன்பத்தை நீக்கும் இச்சை.] பாரதந்த்ர்யமாவது: பகவானுக்கு அதீநமாயிருக்கை. அநந்யார்ஹத்வ

மாவது: பகவானை யொழிந்த மற்ற வஸ்துக்களுக்கு உரிய தல்லாஸமயாகிற குணம். இம்மூன்றும் புருஷகார பூதையான பிராட்டிக்கு அவச்யமான குணங்கள். ஜீவாத்மாக்கள் ஸம்ஸாரத்தில் கஷ்டப்படுகிற தசையைப் பார்த்து அவர்களைப் பகவானோடு சேர்த்து விடுவதற்கு அந்தச் சேதநர்களுடைய துக்கத்தைப் போக்கடிக்க வேணு மென்கிற க்ருபை அவளுக்கு வேண்டு மன்றோ?

பகவான் ஸ்வதந்த்ரன். அவனை வசீகரிக்க வேண்டின், அவன் மனம் போன ப்ரகாரம் நடந்து, தன் வழி திருப்புகைக்குப் பாரதந்த்ர்யம் இல்லாவிடில் பயனில்லை யாகையால் பாரதந்த்ர்யம் வேண்டியதாயிற்று. அப்படியே அநந்யார்ஹத்வம் என்கிற குணமும் மிகவும் அவசியம். பகவானுகிற நம்மை விட்டு வேறொரு வஸ்துவுக்கு உரியவளன்றிக்கே இருக்கிற இவள், நம்முடைய ப்ரயோஜநத்துக்கன்றோ சொல்லுகிறாளென்று அதை ஆதரவுடன் அங்கீகரித்து அவள் இஷ்டப்படி செய்வதற்கு உறுப்பான குணமாகையால் இது ப்ரதாநமாகிறது.

இப்படி, புருஷகாரமாவதற்குரிய மூன்று குணங்களையும் தானே நாட்டார்க்கு வெளியிட்டாள் பிராட்டி. இந்த மூன்று பிரிவுகளைத்தான் விச்லேஷ த்ரயம் என்பார்கள். பிராட்டி முதற் பிரிவில் இம்மஹா குணத்தை வெளியிட்டாள். ஸர்வேச்வரன் மநுஷ்ய ஸஜாதீயனாய்ப் பூலோகத்தில் அவதரிக்க, அதற்குத் தகுந்தபடியே பிராட்டியும் ஸீதையென்கிற அவதார மெடுத்துச் சக்ரவர்த்தித் திருமகனோடு வநத்தில் எழுந்தருளி யிருக்கும் போது 'ராவணன் பிரித்தான்' என்கிற வ்யாஜத்தினால் தேவ ஸ்த்ரீகளைச் சிறையிலிருந்து மீட்பதற்காகத் தானும் சிறையிருந்தாள். 'நிஷஙு ஹீவிஃகாநிவதிதநிஜாவதஸ்ரூஷிதூாவதீணஃவிதுர கூ ஊகூ' என்கிறபடியே ஸ்வதந்த்ப ப்ரஜை கிணற்றிலே விழுந்தால் தானும் கூடக் குதித்தெடுக்கும் தாயைப் போல, சேதநர்கள் விழுந்த ஸம்ஸார ஸமுத்ரக் கிணற்றில் தானும் விழுந்து ரக்ஷிக்கையாலே அவள் தன் தயா குணத்தை வெளியிட்டாள். அதுவுமன்றித் தன்னை அல்லும் பகலும் தர்ஜந பர்த்ஸநம் செய்து உபத்ரவித்த எழுநூறு க்ரூர ராக்ஷஸிகளையும் த்ரிஜடையின் ஸாத்விகதியில் அந்தர்க்கதைகளாக்கி, 'ஹவெயம ஶரணம ஹி வஃ' என்று அபய ப்ரதாநம் செய்தாள். தான் செய்த அபய ப்ரதாநம் வார்த்தையோடு மாத்ரம் நின்றுவிடாமல், ராவண வதாநந்தரம் சிறிய திருவடி தனக்கு ராவண வத வ்ருத்தாந்தமாகிற சோபநம் சொல்லிப் போந்த பொழுது, அதற்குப் பாரிதோஷிகமாகப் பரிசாரக க்ரூர ராக்ஷஸிகளை வதம் செய்ய அநுமதி கொடுக்கவேண்டுமென்று சிறிய திருவடி ப்rார்த்திக்க, 'ராஜஸம்ஶ்ரயவஶ்யாநாம்' என்று அவர்கள்

யஜமானனுடைய ஆஜ்ஞையின்படி நடந்தார்களாகையால் அவர்களிடத்தில் குற்றமில்லை யென்று குற்றத்தைக் குணமாக உபபாதநம் பண்ணினாள். பின்னும் 'ஈஷஹுயாஜீஹ ஒ¬பஹுமா:' [எனக்கு அவர்களுடைய துயரங் கண்டு பொறுக்க வல்ல கல் நெஞ்சமில்லை] என்றும், 'பாபா நாம் வா ஶுஹாநாம் வா வயாஹஜாணாம் ஹுவ௦மஉ। காயஹும் கரு¬ணஉா யெஹுண ந கஸ்ஶ்ரீணாவரா யதி' [இவ்வருகு நின்று அவ்வருகு ஸஞ்சரிக்கிற உமக்குச் சரணாகதி தர்ம ஸூக்ஷ்மம் தெரியாதுகாண்; இவர்கள் அபராதம் செய்து வதத்துக்கு உரியவராயினும் இவர்கள் மீது தயையைச் செலுத்த வேண்டும். பாபிகளுக்குத்தானே நம் தயை முக்யம். சரணாகத தர்மம் தெரிந்தவர்கள் இந்தத் தயையை அநுஷ்டிப்பார்களன்றோ? அபராதம் செய்யாதவர்களைக் காப்பாற்றுவதோ வென்றால் தயை என்கிற குணத்துக்கு விஷயமில்லாமல் போய்விடும்] என்றும் மன்றாடி மறுதலித்து அவர்களை ரக்ஷித்ததால் இதை அநுஷ்டாந பர்யந்தமாகக் காட்டினாள்.

இதிலிருந்து ஆத்ம குணங்களுள் ப்ரதாநமாகிய தயை என்கிற குணம் அவச்யம் என்று ஏற்பட்டது. ஈச்வர க்ருபையைக் காட்டிலும் இவள் க்ருபைக்குப் பெருமை உண்டு. பகவான் ஸ்வதந்த்ரனும் கர்மாநுரூப பல ப்ரதனுமாகையாலே அவனுடைய க்ருபை ஸ்வாதந்த்ர்யத்தில் அமுக்குண்டு ஒவ்வொரு ஸமயங்களில் தலை யெடுக்கும். நித்யம் அஜ்ஞாத நிக்ரஹையான படியாலே எப்பொழுதும் பிராட்டியினுடைய க்ருபை நிக்ரஹம் கலசாதபடி ஒரு படியாயிருக்கும். ஆகையாலன்றோ பிராட்டியை 'கருவாஹ்ஸ ரூவிணீ' என்றும் 'தெவ்யா காரு¬ண்யரூவயா' என்றும் சொல்லுகிறது. 'ததூ¬ணஸாரகூாக' என்கிற ந்யாயப்படி க்ருபையை ஸாரமான ஸ்வரூபக நிரூபக தர்மமாக உடையவளாகையாலே 'யஉஹு யஶிஹணொ ரஹெஸொவஅரா:' என்று க்ருபையே பிராட்டி என்று சொல்லப்படுகிறது. இதை 'ஸஉஹ்ஜநநீம் வஜெ தெதநூஹ்ஜநஉாயிநீம்। வெபயஶீ ஶ்ரீநிவாஸஸ்ய கரு¬ணாஶிவ ரூவிணீம்॥' என்று கருணையே ஒரு பெண் வடிவம் கொண்டதோ வென்று உருவகப்படுத்தி நம் தேசிகன் அருளிச் செய்தார். இப்படி, குணங்களை மூன்றாகப் பிரித்துக்கொண்டு முதற் பிரிவில் க்ருபையாகிற மஹாகுணத்தை வெளியிட்டாள்.

பிராட்டியின் பாரதந்த்ர்யம்:—பெருமாள், ராவண ஸம்ஹாரம் பண்ணி மீண்டு திருவயோத்தியில் பட்டாபிஷேகம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார். அப்பொழுது ஸீதை கர்ப்பிணியானாள். அப்போது பெருமாள் பிராட்டியைப் பார்த்து 'ஈவதூயாஹொ வெதெஹி உஉாய௦

ஸ்ஹவஸ்தித: । கிமிச்சஸி ஸகாமா த்வம் ப்ரூஹி ஸர்வம் மஹாநதே ॥'
[வாராய் ஸீதையே! எனக்கு உன்னிடத்திலிருந்து மக்கட்பேறு உண்டாகப் போகிறது. நீ இந்த ஸமயம் எதை விரும்புகிறாயோ அதைச் சொல்வாய்] என்று நியமிக்க, பிராட்டியும் 'தபோவநாநி வாணயாநி த்ரஷ்டும் ராகவ' [ராகவா! ஸர்வமும் தெரிந்த தேவரீருக்கு அடியேனுடைய மனோரதம் தெரியாதோ? ஏற்கெனவே எந்தத் தபோவநங்களில் தேவரீருடன் கூடி வஸித்திருந்தேனோ அப்படிப்பட்ட பரிசுத்தங்களான தபோவநங்களைப் பார்க்க மீண்டும் ஆவலுடையேனாகிறேன்] என்று தனக்குண்டான வநவாஸத்தின் விருப்பத்தைச் சொல்லிக்கொள்ள, பெருமாள் உலகத்தில் தமக்கு உண்டான அபவாதத்தைப் போக்குவதற்காக இதை வ்யாஜமாக ஏற்படுத்தி வநம் அனுப்பினார். இப்படி ஸ்ரீராமனை விட்டுப் பிரிந்த இப்பிரிவில் பிராட்டி தன்னுடைய பாரதந்த்ரயத்தை வெளியிட்டாள். ஸ்ரீ ராகவன் நம்மை அந்தப்புறத்தில் இருத்திப் பந்தப்படுத்துவதற்கும் காடேறச் சொல்வதற்கும் ஸ்வதந்த்ரனாகையால், அவன் நினைவைப் பின் செல்வதே நமக்கு ஸ்வரூபமென்று பர்த்தாவின் ஆஜ்ஞையில் அடங்கியிருப்பது தான் நமக்குத் தகுதியென்று அவள் மநஸ்ஸின் அநுவர்த்தநமாகிற பாரதந்த்ரயத்தை வெளியிட்டாள்.

இளையபெருமாள் கங்கைக் கரையில் வால்மீக முனிவர் ஆச்ரமத்துக்கு அருகில் ஸீதையை விட்டுவிட்டுத்தான் திரும்புகையில், பிராட்டியைப் பார்த்துத் துக்காவிஷ்டராய் 'வாராய் ஸீதையே! இந்த விஷயத்தில் அடியேனிடத்தில் யாதொரு அபராதமும் இல்லை. பெருமாள் லோகாபவாத பரிஹாரார்த்தமாக நியமித்த கார்யத்தை அநுஷ்டிக்க நேர்ந்தது' என்று சொல்ல, ஸீதையும் அதைக் கேட்டு மிகவும் ப்ரலாபித்து 'ந வலு அத்யைவ ஸௌமித்ரே ஜீவிதம் ஜாஹ்நவீஜலே । த்யஜெயம் ராகவம் வம்ஶெ ஹதுர்மெ பரிஹாஸ்யதி' ['வாரீர் லக்ஷ்மணா! ராகவனிடத்திலிருந்து உண்டான இந்த ஸந்ததியானது அவன் வம்சத்தில் அழிந்துபோய் விடுமென்றல்லவோ நான் இப்பொழுது கங்கா ஜலத்தில் உயிரைவிடத் துணியாமல் இருக்கிறேன்; இப்பொழுது நான் கர்ப்பிணியான படியால் உயிரை விட்டேனாகில் ஸந்தாநம் நசிக்கும். ராகவனுக்கு அதிசயத்தை உண்டாக்க வேண்டிய அவனுடைய ஸந்ததிக்கு லோபம் வரும்படியான கார்யத்தைச் செய்யக் கூடாதென்றல்லவோ ப்ராணனுடன் இருக்கிறேன்] என்றாள். இதனால் பிறர்க்காக ஜீவிக்கவேண்டி யிருக்கிறவர்களுக்குத் தமது நினைவின்படி எதுவும் நடக்கமாட்டாதென்றும் யஜமாநனுக்காக ப்ராணனை அவர்கள் நோக்கிக் கொண்டிருக்க வேண்டு மென்றும் சொல்லித் தனது பாரதந்த்ரயத்தை அநுக்ரஹித்தாள்.

முதற் பிரிவில் பத்து மாஸத்தில் படாதபாடு பட்ட ஸீதை, அநேக ஸம்வத்ஸரம் பர்த்தாவின் மநஸ்ஸின்படி நடப்பதே ஸ்வரூபமென்று நினைத்துப் பிரிந்திருந்தாள். இதனால், '𑌪𑌤𑌿𑌰𑍍𑌹𑌿 𑌦𑍈𑌵𑌤𑌂 𑌨𑌾𑌰𑍍𑌯𑌾𑌃 𑌪𑌤𑌿𑌰𑍍𑌬𑌨𑍍𑌧𑍁𑌃 𑌪𑌤𑌿𑌰𑍍𑌗𑌤𑌿𑌃। 𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌰𑌪𑌿 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍 𑌭𑌰𑍍𑌤𑍁𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃' [ஸ்த்ரீகளுக்குப் பர்த்தாவே தைவம்; பர்த்தாவே லாளநம் பண்ணத் தகுந்தவன்! அவனே ப்ராப்யன், ப்ராபகன்; ப்ராணன்களினும் எப்பொழுதும் பர்த்தாவுக்கு ப்ரியமான கார்யம் செய்யவேண்டும் என்று சொல்லும் உத்தமமான தர்மத்தைப் பிராட்டி வெளியிட்டாள்.

---

ஸ்ரீ:

# புஸ்தக விமர்சம்.

## (1) ஸ்ரீ தேவநாயக பஞ்சாசத்.

[ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள ஸ்தோத்ரம்:
ஸ்ரீ. எ. வி. கோபாலாசார்யருடைய வ்யாக்யானத்துடன்:
கோமளாம்பா அச்சுக்கூடம், கும்பகோணம். விலை அணா 8.]

ஸ்ரீ. உப. எ. வி. கோபாலாசார்யர் எம். ஏ., பி. எல்., என்று ப்ரஸித்தரான ஸ்ரீ அன்பில் வேங்கட கோபாலாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள பகவத் ஸ்தோத்ர ஜாலங்களுக்கு ஒரு வ்யாக்யாநம் எழுதி வருகிறார் என்பது ப்ராயேண எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். இப்பொழுது பகவத் த்யாந ஸோபாநம், தசாவதார ஸ்தோத்ரம், கோபால விம்சதி, தேவநாயக பஞ்சாசத் ஆக நாலு ஸ்தோத்ரங்கள் வெளிவந்திருக்கின்றன. வ்யாக்யாநம் ஸம்ஸ்க்ருத பாஷையில் எழுதப்பட்டிருக்கின்றது. முதல் மூன்று ஸ்தோத்ரங்கள் தேவநாகர லிபியிலும், நான்காவது க்ரந்த லிபியிலும் அச்சுப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வ்யாக்யாநம் ஒரு அஸாதாரண வ்யாக்யாநமே. இதில், ஸ்ரீ கோபாலாசார்யர், கேவலம் மூலத்தின் சப்தார்த்தங்களையும் வாக்யார்வயத்தையும் மாத்ரம் எழுதாமல், வ்யங்க்யமாயுள்ள அர்த்த விசேஷங்களை அநுபவாநுரூபமாக வெளியிட்டிருக்கிறார். ஸ்ரீ நிகமாந்தாசார்யன் ரஸ விசேஷங்களை இந்த ஸ்தோத்ரங்களில் எவ்விதம் அநுபவித்திருக்கிறார் என்பதும், இம்மாதிரியான ரஸங்கள் மஹர்ஷிகள் போன்ற மற்றைக் கவிகளால் எவ்விதம் அநுபவிக்கப்பட்டிருக்கின்றனவென்பதும், விசேஷித்த சப்த ப்ரயோகங்களால் பூர்வாசார்யர்களுடைய திவ்ய ஸூக்திகளும் உபநிஷத் வாக்யங்களும் எப்படி ப்ரத்யபிஜ்ஞாதங்களாகின்றனவென்பதும், இன்னும் இவைபோன்ற பல ப்ரௌ

டர்ம்சங்கள் இந்த வ்யாக்யாநத்தில் ஜடிலங்களாகக் காணப்படுகின்றன. விஷயங்களும் ப்ராயேண அத்யாத்ம வித்யா ஸம்பந்தங்களாக இருக்கிறபடியால், ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யாதிகளில் காணப்படும் விஷயோபபாதநங்களும் அவ்வவ்விடங்களில் ஸங்க்ரஹிக்கப்பட்டுச் சர்ச்சை செய்யப்படுகின்றன. இம்மாதிரி வ்யாக்யாநம் எழுதுவதற்கு அபேக்ஷிதமான ஜ்ஞாந சக்த்யாதி ஸம்பத்தை உடைய வித்வான்கள் இக்காலத்தில் மிக துர்லபர்களே.

முதலில் இந்த வ்யாக்யாநங்களை நாம் படித்த பொழுது அவைகளில் விவரிக்கப்பட்டுள்ள அர்த்த விசேஷங்களாலும் பத ப்ரயோஜநங்களாலும் ரஸவத்தான அவதாரிகைகளாலும் நம்முடைய ஹ்ருதயம் ஒரு பக்கத்தில் ஆகர்ஷிக்கப்பட்டு அளவற்ற ஆநந்தத்தையும் ஆச்சர்யத்தையும் அநுபவித்தது. மற்றொரு பக்கத்தில், ஒருகால் ஸ்ரீ கோபாலாசார்யர் ஸ்வயம் பகவத் குணாநுபவம் செய்தவரானபடியால், கவி ஹ்ருதயத்தை விவரிக்க ப்ரயத்நப்படும்பொழுது கவியால் அவிவக்ஷிதங்களான அம்சங்களும் தமக்குப் போக்யமாக இருக்கின்றன வென்று எண்ணி கவி வாக்யங்களுள் புக விடுகிறாரோ என்னும் ஒரு அதிசங்கையும் ஜநித்தது. பிறகு மேன் மேல் வ்யாக்யாநம் ப்ரவஹிக்கும் நேர்ரணியையும், அதில் தென்படும் ரஸாதிசயத்தையும், அந்த ரஸாதிசயம் அநுபவ ப்ராப்தமான பிறகு ஸ்ரீ தேசிகனுடைய திவ்ய ஸூக்திகளில் விளங்கும் வைபவ விசேஷத்தையும் பார்க்கப் பார்க்க, அந்த அதிசங்கை நம்மை விட்டு விலகி விட்டது. யதார்த்தமாகவே ஸ்ரீ தேசிகனுடைய திவ்ய ஸூக்திகளில் பாவ காம்பீர்ய மில்லாத பதம் ஒன்று கூட இல்லை. தவிரவும் ஸர்வேச்வரனுடைய கண்டாவதார ரூபமான ஸ்ரீதேசிகன் விஷயத்தில் ஒரு அர்த்த விசேஷம் நமக்கு அபரிசிதமாயும் நம்மால் அப்ரதீக்ஷிதமாயும் இருக்கின்றது என்னும் காரணத்தால் மாத்ரம் அதை அவருடைய ஹ்ருதய மன்று என்று நாம் சொல்லத் துணியோம்.

ப்ரக்ருத தேவநாயக பஞ்சாசத் வ்யாக்யாநத்தில் அம்மாதிரியான பாவ விவரணங்கள் பலவுள. அவை யெல்லாவற்றையும் இவ்விடத்தில் அநுவதிப்பது அசக்யமாதலால் இரண்டொரு விஷயங்களை மாத்ரம் ப்ரஸ்தாவித்து அதனுடன் விரதராகிறோம்.

“ யோகம் க்ஷணீயவதுவஜ்ரவராஹயோகம்
த்யாகம் விநாபி யமவஷியம் வ்யாம்தி ।
விஷ்வம்தி நிஜசரவதே! ஸிரஸி ப்ரஜாநாம்
தெயஃஸ்வஹஸ்த்ரவிதாநி உஷாக்ஷராணி ॥ ”

என்னும் ச்லோகத்தில், ‘உபாஸநாபர பர்யாயமான யோகமன்றோ ஸமஸ்த பாபங்களையும் போக்கடிக்கும்? அப்படிப்பட்ட யோகமொன்று மின்றிக்கே ஒரு ரஜ: கணத்தின் ஸம்ஸர்க்கம் மாத்ரம் ஸகல பாபங்களையும் நாசம் செய்கிறதே! இது என்ன ஆச்சர்யம்?’ என்று ஒரு ஆச்சர்ய ஆவிஷ்கரண த்வாரா பகவானுடைய திருவடித் தூளின் பெருமை பேசப்படுகின்றது. பாப நிவ்ருத்தி ஸம்பவிக்கின்றது என்னும் அர்த்தத்தை, ‘ப்ரஜைகளின் தலையில் ப்ரஹ்மாவால் எழுதப்பட்டிருக்கும் எழுத்துக்கள் இந்தத் தூளியின் ஸம்

ஸர்க்கத்தால் லயம் அடைகின்றன' என்று வெளியிட்டிருக்கிறார். இதில், கீழ்ச் சொல்லப்பட்டிருப்பது ஒரு ஆச்சர்யம்; யோக மின்றிக்கே யோகத்தால் பாபம் லயிக்கின்றது என்னும் சாப்த விரோதம் மற்றொரு ஆச்சர்யம். தூளி படியப் படிய அக்ஷரங்கள் மலிநமாவது யுக்தமென்றும் த்யோதிக்கப்படுகிறது. கீழ் ச்லோகத்தில் 'வஜ்ரத்வஜாங்குஶ' இத்யாதியால் திருவடியை வர்ணித்தார்; இந்த ச்லோகத்தில் அந்தத் திருவடியின் தூளிகளின் பெருமையை வர்ணிக்கிறார் என்பது அவதாரிகை. இம்மாதிரி ஸாமாந்யமான வ்யாக்யாநம் விவரிக்கும்.

ஸ்ரீ கோபாலாசார்யருடைய வ்யாக்யாநமோ வேறு. "ஶாஶ்வம் வஹம் பவத: ஶிரோவிபூஷணம் ந:" [உம்முடைய சரண யுகளத்தை எப்பொழுதும் நாங்கள் சிரோலங்காரமாகத் தரிக்கக்கடவோம்] என்று கீழ் ச்லோகத்தில் ப்ரார்த்தித்ததைக் கேட்டுப் பகவான், 'அது எப்படி ஸாத்யம்? உங்களுடைய சிரஸ்ஸில் லலாட லிகித ரேகைகள் இருக்கின்றனவே! அவை அங்கிருக்கும் காலத்தில் வஜ்ர த்வஜாதி ரேகைகள் அவ்விடத்தில் எப்படி அவகாசத்தை அடையும்?' என்று ப்ரச்நம் செய்வதாக வைத்துக்கொண்டு, அந்த 'லலாட ரேகைகளெல்லாம் உம்முடைய திருவடித் தூள் ஸம்பந்தம் சேர்ந்தவுடன் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து விடுமென்றோ?' என்று இந்த ச்லோகத்தால் ஸமாதாநம் சொல்லுகிறார். தவிரவும், 'பகவானுடைய நாபீ கமல ரஜஸ்ஸிலிருந்து உண்டானவர் ப்ரஹ்மா; அந்த ரஜஸ்ஸின் கார்யமாகிற ப்ரஹ்மாவினிடத்திலிருந்து ஏற்படும் அக்ஷரங்கள் அவருடைய கார்யம். 'அக்ஷரம் தமஸி லீயதே' என்பது போல, இந்த அக்ஷரங்கள் தமக்குக் காரணமாயிருக்கும் ரஜஸ்ஸில் லயிப்பது யுக்தமே'என்பதும் த்யோதிதமாகின்றது. அக்ஷர சப்தமும் லய சப்தமும் இந்த அர்த்தத்தை த்யோதிப்பிக்கின்றன. தவிரவும், 'நாபீ கமலத்தில் உண்டான ப்ரஹ்மா அக்ஷராப்யாஸார்ஹ வயஸ்கனான ஒரு சிறு குழந்தை. அவர், குழந்தைகள் மணலில் அக்ஷரம் எழுதுவது போல், ப்ரஜைகளுடைய சிரஸ்ஸில் அக்ஷரங்களை எழுதுகிறார். பாலாக்ஷரமானபடியால் அந்த அக்ஷரங்கள் கோணலாகவும் அபத்தங்களாகவும் ("விஷ்வஞ்சி து அக்ஷராணி") இருக்கின்றன. அவை இப்படி இருப்பதைப் பார்த்து அவருடைய பிதாவாகிற பகவான், மணலில் எழுதப்பட்டுள்ள அக்ஷரங்களை மணலைப் போட்டு அழிப்பது போல, ரஜ:கார்யத்தின் கார்யமான இந்த அக்ஷரங்களை ரஜஸ்ஸில் லயமடையும்படி செய்கின்றான். 'விஷ்வஞ்சி' என்னும் பதத்திற்கு 'நாலு பக்கங்களிலும் வ்யாப்தங்கள்' என்பது மாத்ரம் அர்த்தமன்று; 'அநேக கோணல்களுடன் கூடிய' என்னும் அர்த்தமும் த்யோதிதமாகின்றது. இது மாத்ரமன்று; "விஷ்வஙந்யா உத்க்ரமணே பவந்தி" என்னும் உபநிஷத் வாக்யமும் ஸ்மாரிதமாகின்றது. அதாவது 'ஊர்த்வ கதியைத் தவிர்த்த மற்றை விஷ்வக் கதிகளை ப்ராபிக்கக் கூடிய' என்று சொன்னதாயிற்று. லலாட லிபியால் சொல்லப்படும் ஜந்மாந்தர பாபங்கள் விஷ்வக் கதியைத் தவிர்த்து ஊர்த்வ கதியை அடைவிக்குமோ? தவிரவும், தூளி படிவதால் அக்ஷரங்கள் மறைவு அடைகின்றன என்பதன் யுக்ததையைக் காட்டிலும், மணலில் எழுதப்பட்டுள்ள அக்ஷரங்களை மணலைப் போட்டு அழிக்கிறார் என்பது யுக்ததரம். இவையெல்லாம் ஸ்ரீ கோபாலாசார்யருடைய பாவ விவரணம். இவைகளின் ரஸத்தை ரஸிகர்கள் அறிவார்கள்.

அடுத்த ச்லோகத்தின் அவதாரிகையையும் பார்ப்போம். 'ப்ரஹ்மா எனது புத்ரன்; புத்ரனை ஆத்மாவென்று ச்ருதி சொல்லுகின்றது; அப்படிப் புத்ரனாக இருக்கும் ஆத்மாவால் எழுதப்பட்டுள்ள லலாட லிபியை நான் எவ்விதம் அழிப்பேன்?' என்று பகவாந் ஆக்ஷேபிப்பதாக வைத்துக்கொண்டு, 'ப்ரஹ்மா மாத்ரமா உன்னுடைய ஆத்மா? நாங்களும் உன்னுடைய ஆத்மா வல்லோமோ? "ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்" என்று நீரே உத்கோஷித்திருக்க வில்லையோ?' என்று ஸமாதாநம் சொல்வதாக

" யே ஜந்துகோடிஷு நிரந்தரஜாதசைத்யா-
ஸ்தேஷாம் பவத்யநுபவேந நிவத்த யோகா ।
ஸஞ்ஜீவிநோஸ்து நிஜநாயக ! தாவுபாவப்யேதே
த்வதீயஸுத யோஷிதஸுதாநம் ॥ "

என்னும் அடுத்த ச்லோகத்திற்கு அவதாரிகை விவரிப்பது மிகவும் ச்லாகிக்கத் தகுந்ததாகவே இருக்கின்றது. இந்த அவதாரிகை இல்லாவிட்டால் "தே த்வதீயஸுத யோஷிதஸுதாநம்" என்பது நிஷ்ப்ரயோஜநமாகவே நிற்கும். "யந்மகோடி ஸஹஸ்ரேண விஷ்ணோராராத்ய வஞ்சிதாः" என்று சதுர்முக ப்ராஹ்மாவுக்கு ஏற்படும் ஏற்றத்திற்கு, இந்தப் பக்தர்களும் 'ஜந்துகோடிஷு நிரந்தரஜாத சைத்யா:' என்பதால் ப்ரதிவசநம் சொல்லப்படுவதாக 'கோடி' சப்த ப்ரயோக பலத்தை ஆதாரமாகக் கொண்டு விவரித்திருப்பதும் அதிமாத்ரம் ஸங்கதமே. 'தே: உபாவப்யேதே:' என்பதால் "ஸ மஹாத்மா ஸுதுர்லப:" என்பது ஸ்மாரிதமாகின்றது என்று சொல்வதும் அழகே. இப்படிப்பட்ட நவம் நவமும் அத்யாஹ்லாதகரங்களுமான பாவ விவரணங்கள் ஆயிரக்கணக்காக இருக்கின்றன.

தவிரவும், இந்தத் தேவநாயக பஞ்சாசத்தில் இதர ஸ்தோத்ரங்களைக் காட்டிலும் ஒரு வித வைலக்ஷண்யத்தை ப்ரகாசிப்பிக்கும் அம்சமொன்று உண்டு. ஸ்ரீ தேசிகன், இதர ஸ்தோத்ரங்களில் பகவத் கல்யாண குணங்களைப் பற்பல விதமாக அநுபவித்து விட்டு, இதில் அந்தக் குணங்களை ஒரு ரஸ விசேஷத்துடன் அநுபவிக்க வேண்டுமென்று திருவுள்ளம் பற்றி, இத: பூர்வம் ஆழ்வாராதிகளால் ஸூசிதமாயுள்ள மார்க்கத்தை அடியொற்றி, தம்மை ஒரு நாயிகை போலவும் பகவானைத் தமது நாயகன் போலவும் உணர்ந்து பேசுகிறார். இப்படிப் பேசுவது ச்ருதி ஸ்ம்ருதி விருத்தமான காம புருஷார்த்தத்தைப் பேசுவதாக மாட்டாது என்பது, வேதநமென்றும் உபாஸநமென்றும் உபநிஷத்துக்களிற் சொல்லப்படும் பக்தியைக் காட்டிலும் இது வேறுபட்டதன்று என்பதால் விளங்கும். தவிரவும், பக்தர்களுக்குள்ள அநந்யார்ஹ சேஷத்வத்தாலும் அநந்ய சரணத்வத்தாலும், அந்தப் பக்தர்கள் அந்வயத்தில் தரித்து வ்யதிரேகத்தில் தரியா தொழிகையாலும், தததேக போகராகையாலும், அவர்களுக்குப் பிராட்டிமார் தசை உண்டாகத் தட்டில்லை. எதிர்த்தலையில் பும்ஸ்த்வத்தை அழித்துப் பெண்ணுடை உடுக்கும்படி செய்ய வல்லதன்றோ பரம புருஷனுடைய புருஷோத்தமத்வம்? ஆனால் ஸ்ரீ தேசிகன் ஆழ்வாராதிகள் போல வன்றிக்கே, தமக்கு ப்ராப்தமாயிருக்கும் நாயிகா பாவத்தைக் கொஞ்சம் கூடமாகவே வெளியிடுகிறார். தூது விடுவது முதலான வ்யாபாரம் த்ருஷ்டர்களான காந்தைகளால் அநுபவிக்கப்படும் ரஸ விசேஷம்; "பிம்பாதரம் ஸ்ப்ருசதி நாமவதீ மதி மே" என்றும் "ஸ்வேதாம்பு ஸம்ஸ்ப்ருசதி நாயக! தாவகீந த்யாஸம் விதிஸ்ப்ருஹயதே தீ:" என்றும் "தீ:" முதலான ஸ்த்ரீ லிங்க நிர்த்தேசத்தாலும் அந்யாபதேசத்தாலும் பாவாவிஷ்கரணம் செய்வது தத்பூர்வ ஸமாகமர்களான நவோடைகளால் அநுபவிக்கப்படும் ரஸ விசேஷம். இந்த அம்சங்களும் ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமியால் அந்யாத்ருசமாக விவரிக்கப்பட்டிருக்கின்றன,

உண்மையாகவே, இந்த வ்யாக்யானம் அக்ஷேத்ரஜ்ஞர்களுக்கு நிதியை ப்ராபிக்கும் அநர்க்கமான ஒரு அஞ்ஜனம் போலவே இருக்கின்றது. இந்த நாலு ஸ்தோத்ரங்களுக்குப் போல மற்றை ஸ்தோத்ரங்களுக்கும் பூர்வ விவரணத்தை ஸ்ரீ கோபாலாசார்யர் எழுதி சீக்ரத்திலேயே ப்ரகாசிப்பர் என்று நாம் ஸோத்கண்டம் எதிர் பார்த்திருக்கிறோம்.

---

## (2) ஜீவாத்ம ஸ்வரூபம்.

(ஸ்ரீ. பி. என். ஸ்ரீநிவாஸாசார்யர் எம். ஏ. ந்யாயசாஸ்த்ர உபாத்யாயர், பச்சையப்பன் பாடசாலை, மதராஸ். விலை ரூ. 3—0—0.]

பகவத் ராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாரம் ஜீவாத்ம ஸ்வரூபமானது எப்படிப்பட்டது என்பதை ஆங்கில பாஷையில் விவரித்து ஸ்ரீ. பி. என். ஸ்ரீநிவாஸாசாரியர் எம். ஏ. என்னும் ஒரு வித்வான் க்ரந்தமொன்றை எழுதியிருக்கிறார். அந்த க்ரந்தத்தை அச்சுப் பதிப்பித்த ப்ரபுக்களுடைய நியமனத்தின் பேரில் நாம் இந்த விமர்சம் எழுத ப்ரவ்ருத்திக்கிறோம்.

பாச்சாத்ய வித்வான்களுள் பலர், 'அத்வைத மொன்றே ஹிந்து வேதாந்தம்; உபநிஷத்துக்களெல்லாம் 'ஜகத் முழுவதும் ப்ரஹ்மமே' என்னும் அர்த்தத்தையே ப்ரதிபாதிக்கின்றன' என்று எண்ணியிருக்கிறார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். விசிஷ்டாத்வைத மென்று ஒரு மதம் இருக்கின்றது என்பது அவர்களுக்கு ப்ராயேண அவிதிதம். நமது தேசத்திலும் ஆங்கில பாஷையை மாத்ரம் அப்யஸித்து அதில் பயிற்சியை அடைந்திருக்கும் அநேக வித்வான்கள், 'விசிஷ்டாத்வைதத்தின் கொள்கைகள் யாவை? என்ன அம்சங்களில் அது அத்வைதத்தைக் காட்டிலும் வேறுபட்டது?' என்பதை அறியாதவர்களாய் அதை உதாஸித்து வருகிறார்கள். இவர்களெல்லாருக்கும் உபகாரமாய் ஸ்ரீநிவாஸாசார்யர் இந்த க்ரந்தம் எழுதினதைப் பற்றி நாம் ஸந்தோஷிக்கிறோம்.

இம்மாதிரியான ஒரு க்ரந்தம் எழுதுவதற்கு ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசார்யர் மிகவும் அர்ஹரே. அவர் தத்வ விசாரத்தில் மிகச் சிறந்தவர்; பாச்சாத்ய க்ரம ப்ரகாரம் ந்யாய சாஸ்த்ரத்தைப் பூர்ணமாக அப்யஸித்தவர்; விசிஷ்டாத்வைத வேதாந்தத்தில் தேர்ந்த ஜ்ஞானமுள்ள அநேக வைதிக வித்வான்களுடைய பரிசயத்திற்குப் பஹுகாலமாகப் பாத்ரமாகி, அவர் நமது ஆசார்யர்களால் விவரிக்கப்பட்டுள்ள விஷயங்களை யெல்லாம் கசடறக் கற்றிருக்கிறார். அந்த விஷயங்களைப் பாஷாந்தரத்தில் சுத்தமாக விவரிப்பதற்கும் அவருக்குப் பூர்ணமான திறமை உண்டு. இந்த யோக்யதைகளுடன் ஹார்த்தமான தைவ பக்தியும் ஆர்ஜவம் முதலிய மற்ற நற்குணங்களும் அவரிடம் நிறைந்திருக்கிறபடியால் அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கார்யத்திற்கு அவர் அர்ஹர் என்பதில் ஆக்ஷேபமில்லை.

இந்தப் புஸ்தகத்தில், அவர் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் முழுவதையும் விவரிக்க ப்ரயத்நப்படவில்லை. ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கு முள்ள ஸம்பந்தத்தை மாத்ரம் அந்த ஸித்தாந்த ரீதிக்கு ஒத்தபடி விவரிக்க ப்ரயத்நப்பட்டிருக்கிறார். நம்முடைய தர்சனத்திற்கே அஸாதாரணமாயும் ப்ரதானமாயும் இருக்கும் கொள்கை, சேதநா சேதநங்களுக்கும் பகவானுக்கு முள்ள சரீராத்ம ஸம்பந்தமே. ஈச்வரனைக் காட்டிலும் விலக்ஷணங்களாகச் சேதநங்க ளென்றும் அசேதநங்களென்றும் இரண்டு

வஸ்த்வந்தரங்கள் இருக்கின்றன வென்றும், அவைகளின் ஸத்தைக்கும் ஸ்திதிக்கும் ஈச்வரனுடைய ஸ்வரூபம் ப்ரயோஜகமாகிறபடியால் அவைகளைப் பற்ற ஈச்வரன் தாரகனாகிறானென்றும், அவைகளின் ஸத்தை ஸ்திதி ப்ரவ்ருத்தி இம்மூன்றுக்கும் ஈச்வரனுடைய ஸங்கல்பம் ப்ரயோஜகமாகிறபடியால் அவைகளைப் பற்ற அந்த ஈச்வரன் நியந்தாவாகிறானென்றும், அசேதந வஸ்துக்கள் போலவே சேதநராகிற ஜீவன்களும் கேவலம் பரார்த்தர்களென்றும், அப்படிக் கேவலம் பரார்த்த ஸ்வபாவர்களாக இருக்கும் சேதநர்களுக்கு ஸம்பவிக்கும் ஸகல வித போகங்களும் மோக்ஷமும் எல்லாம் ஈச்வரனுக்கே பரம ப்ரயோஜநமாகிறபடியால் அந்த ஈச்வரன் அவர்களைப் பற்றச் சேஷியாகிறானென்றும், இப்படி அவன் ஸர்வ காலத்திலும் ஸர்வாவஸ்தையிலும் தாரகனுமாய் நியந்தாவுமாய் சேஷியுமாய் இருக்கிறபடியால் அவன் அவைகளுக்குச் சரீரியாகிறானென்றும் நமது ஸித்தாந்தம் சொல்லுகின்றது. எப்படிச் சரீரி இராமல் சரீரம் நிற்க மாட்டாதோ அப்படியே பகவாந் இராமல் சேதநாசேதநங்கள் நிற்கமாட்டாதாதலால், இவைகளைப் பகவானுக்கு அப்ருதக் ஸித்த விசேஷணங்களென்றும் சொல்வார்கள். வ்யக்திக்கு ஜாதியும் குணிக்கு குணங்களும் அப்ருதக் ஸித்த விசேஷணங்களாவன போல், பகவானுக்கு ஸமஸ்த சேதநா சேதநங்களாகிற த்ரவ்யங்களும் அப்ருதக் ஸித்த விசேஷணங்களாகின்றன என்பது தாத்பர்யம். ச்ருதி ஸ்ம்ருதிகளில் ஜீவனுக்கும் பகவானுக்கும் சொல்லப்படும் அபேதோபசாரமும் அம்சாம்சிபாவங்களும் இந்த ஸம்பந்தத்தையே உபஜீவித்து நிற்கின்றன. ப்ரபஞ்சம் முழுவதற்கும் பகவானே உபாதாந காரணமென்று சொல்லுமிடத்திலும், விசேஷாம்சத்தில் பகவானுக்குச் சொல்லப்படும் அவிகாரத் தன்மையை நிலை நிறுத்தி விசிஷ்டாம்சத்தில் உபாதாந காரணத்வத்தை நமது ஆசார்யர்கள் ஸ்தாபித்திருக்கிறார்கள். இப்படி ஸகல அம்சங்களிலும் நமது ஸித்தாந்தம் ச்ருதி ஸ்ம்ருதிகளுக்கும் யுக்திக்கும் ஒத்திருக்கின்றது என்பதை ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசார்யர் இந்தப் புஸ்தகத்தில் எடுத்து உரைத்திருப்பது நமக்கு மிக்க ஸந்தோஷத்தை ஜநிப்பிக்கின்றது.

ஸ்ரீ:

# வ்ருத்தாந்த பத்ரிகைகளின் மதிப்புரை.

## (1) தமிழ் ஸ்வராஜ்யம்.

இந்தப் பத்ரிகை, ஸ்வல்ப காலம் முன் ப்ரதி திநம் ப்ரசுரம் செய்யப்பெற்றுத தென் இந்தியா வாஸிகளான தமிழரெல்லாருக்கும் மிக்க உபகாரமாக இருந்து வந்ததை நாம் அறிவோம். நடுவில் ஏதோ சில அஸௌகர்யங்கள் ஸம்பவிக்கவே கொஞ்சகாலம் நின்று விட்டு இது இப்பொழுது மறுபடியும் ஒரு வாரப் பத்ரிகையாக வெளிவருவதற்கு ஆரம்பித்திருக்கின்றது.

ஆர்ஜவத்துடனும் எவ்வித பக்ஷபாதமுமின்றிக்கும் மஹாஜநங்களுடைய நன்மையை உத்தேசித்தே உழைத்து வரும் பத்ரிகைகள் இத்தேசத்தில் மிகவும் அரிதாக இருக்கின்றன. ஏதாவது ஒரு துராக்ரஹத்திற்குப் பாத்ரமாகிச் சிற்சில ஜந ஸமூஹங்களின்மீது த்வேஷத்தையும் பாராட்டிக் கொண்டு, அநேக பத்ரிகைகள், தேசத்திற்கு நன்மையைச் செய்வதற்குப் பதிலாக ப்ரபலமான தீமையையே விளைவித்து வருகின்றன. அப்படிப்பட்ட தோஷமொன்று மில்லாமல், இந்த ஸ்வராஜ்ய பத்ரிகை, வஸ்து ஸ்திதியை உள்ளபடி ஜநங்களுக்குத் தெரிவித்துக்கொண்டும் ஜந ஸமூஹங்களெல்லா

வற்றிலும் ஒருவித அன்புடனும் நடையாட ஆரம்பிப்பதைப் பார்க்க நமக்கு ஸந்தோஷம் ஜநிக்கின்றது. இந்தப் பத்ரிகையின் முக்ய நோக்கம், நமது தேசத்திய ராஜ்ய நிர்வாஹத்தை நமது தேசத்து ஜநங்களுடைய அதீநமாகச் செய்து கொள்ள ப்ரயத்நப்பட வேண்டும் என்பதுதான். தர்மத்துக்கு ஒத்த உபாயங்களைக் கைக்கொண்டு அந்த ஸித்தியைப் பெறுவதற்கு ப்ரயத்நப்படுவது எவ்வித ஆக்ஷேபத்திற்கும் இடம் கொடுக்க மாட்டாதாதலால், அந்த நோக்கத்தை நாம் ஆதரிக்கிறோம். இப்படி நிராக்ஷேபமான நோக்கத்துடனும் ஜகதுபகாரகமான பத்ரிகைக்கு இருக்க வேண்டிய ஸத் குணங்களால் நிறைந்தும் இருக்கும் இந்தப் பத்ரிகையை இனி எவ்வித இடையூறு மின்றி நடத்தி வரும்படி அந்தப் பத்ரிகா நிர்வாஹகர்களை ஸகல தமிழ் மக்களும் ஆதரித்து வருவார்களென்று நாம் நம்புகிறோம்.

## (2) ஸநாதந தர்மம்.

நமது ஸநாதந தர்மத்தை நிலை பெறச் செய்ய வேண்டு மென்னும் ஊக்கத்துடனும் தளராத தைர்யத்துடனும் உழைத்து வரும் ஸ்ரீ உப. யு. பி. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி என்னும் மஹாந் இந்தப் பத்ரிகையின் ஸம்பாதகர். இது இங்லீஷ் பாஷையில் எழுதப் பெற்றுப் பக்ஷம் ஒரு முறை வெளி வருகின்றது.

இக்காலத்தில் நமது தர்மங்களுக்கு நேர்ந்திருக்கும் க்லாநிக் கெல்லாம், நமது ஔதாஸீந்யமே முக்ய காரணம். வ்ருத்தி ஸம்பாதநத்தை உத்தேசித்து நாம் நமது பாலர்களை பாஷாந்தராப்யாஸத்திற்காக இதர ஜாதீயர்களிடம் ஒப்புவித்தோம். அப்படி ஒப்புவிக்கையில், அவர்களை நம்முடைய தர்ம மார்க்கத்தை விட்டு நழுவ விடாமல் பாதுகாத்து வருவதற்கு ஒருவித உபாயத்தையும் நாம் தேடாமல் இருந்து விட்டோம். அதன் பலமாக இப்பொழுது நமது தேசம் நம்முடைய தர்ம மார்க்கங்களில் விச்வாஸமற்றிருக்கும் ஜநங்களால் நிறைந்து விட்டது. தத்காலம் நமது தேசத்தில் உந்நத ஸ்திதியில் இருக்குமவர்களுள் பலர் இம்மாதிரி நமது சாஸ்த்ரத்தில் விச்வாஸமற்றவர்களாகவே இருக்கிறார்கள். ச்ரேஷ்டர்களாக இருக்கும் ஜநங்கள் எந்த மார்க்கம் போகிறார்களோ அந்த மார்க்கத்தையே மற்றை ஸாமாந்ய ஜநங்களும் அநுஸரிப்பார்களாதலால், ஸநாதந தர்மாநுஷ்டாநமே இக்காலத்தில் லுப்த ப்ராயமாகி விடுமென்று பயப்படக் காரணமுண்டு. இந்தத் துர்த்தசையின் வேகத்தைத் தடுக்கவேண்டுமானால், இனியாவது நமது பாலர்களை நாம் அநாதரிக்காமல் இருத்தல் வேண்டும். பாஷாந்தரத்தை அவர்கள் அப்யஸித்து வரும்பொழுது அவர்களுக்கு நமது தர்ம மார்க்கங்களையும் உபதேசத்தாலும் அநுஷ்டாநத்தாலும் யதாவகாசம் போதித்தும், அதிகமாக அஸத் ஸங்கம் நேராமல் அவர்களைப் பாதுகாத்தும், நமது சாஸ்த்ர விரோதிகளால் நமது மார்க்கங்களைப் பற்றிச் செய்யப்படும் தூஷணங்களுக்கெல்லாம் அப்பொழுதுக்கப்பொழுது நமது பாலர்களுடைய புத்தியில் பதியும்படி ஸமாதாநங்களைச் சொல்லிக்கொண்டும், இன்னும் இம்மாதிரி தீவ்ரமான ஜாக்ரதையுடன் நாம் வர்த்தித்து வரவேண்டும். இப்பொழுது ஸ்ரீமாந் க்ருஷ்ணமாசார்யரால் செய்யப்பட்டுவரும் கார்யங்களெல்லாம் இவை போன்றவைகளே. பாஷாந்தரத்தில் இம்மாதிரி பத்ரிகை ப்ரசுரிப்பதும் அவைகளுள் அந்யதமம். ஆகையால் இந்த உபாயத்தை நாம் மிக்க உத்ஸாஹத்துடன் ஆதரிக்கிறோம்.

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## சப்தார்த்த சிந்தாமணி

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபர் ஸந்நிதிக்கு:—

சென்ற கார்த்திகை மாதத்து வேதாந்த தீபிகை பத்ரிகையில் "ஶப்தாா்த்த சிந்தாமணி" என்னும் என்னுடைய ஸம்ஸ்க்ருத அகராதியின் விமர்சத்தைக் கவனித்தேன். இச்சிறு புஸ்தகத்தைப்பற்றி இவ்வளவு புகழ்ந்தது தேவரீருடைய உதாரமான குணாதிசயங்களைக் காட்டுகிறது. இந்தப் புஸ்தகத்தில் ஹு முதலிய தாதுக்கள் இடம் பெறவில்லை என்பது வாஸ்தவமே. அதற்குக் காரணம் தேவரீர் ஊஹித்தபடி ப்ரத்யயங்களை விட்டு நிர்த்தேசிப்பது அவ்யவஸ்தாபாதகமாகு மென்பதன்று. பின் என்னவெனில்: இந்தப் புஸ்தகத்தில் ப்ராதிபதிகங்களையும் விபாதம் முதலியவைகளையும் சேர்த்துவிட்டுத் தாதுக்களையும் அவச்யமான இடங்களில் யஙந்தம் யங்லுகந்தம் முதலியவைகளையும் சேர்த்து, வேறு புஸ்தகமாக எழுதி முடித்திருக்கிறேன். அச்சிட்டு வெளிப்படுதல் அர்த்த ஸௌகர்யத்தையும் சரண்யனுடைய ஸங்கல்பத்தையும் எதிர்பார்க்கிறது.

தவிர, கு॒தர:, கு॒ட: என்று குதிரைக்கும் குடத்துக்கும் வாசகமான இரண்டு பதங்களும் ஸமஸ்க்ருத பதங்களென்றே தெலுங்கு ஹிந்தி நிகண்டுகள் உத்கோஷிக்கின்றன. ஸம்ஸ்க்ருத பாஷையில் கு॒ என்னும் பதம் பூமியை உணர்த்தும். தர என்பது தூவிதாரணே என்னும் தாதுவோடு ஊதெர ரவ என்னும் ஸூத்ரத்தால் அவ ப்ரத்யயம் சேர்க்க நிஷ்பந்நமாகும். தன் குளம்புகளால் பூமியைப் பிளக்கிற தென்னும் காரணம் பற்றிக் குதர சப்தம் அச்வ வாசகமாகிறது. ஆகையினாலேயே யாதவன் தான் இயற்றியுள்ள வைஜயந்தி என்னும் நிகண்டில் "கு॒தரொ வொடகஸ்தாக்ஷ்யஃ குரெணொ ரஹஹொஜநஃ" என்றும், அமர பத பாரிஜாதம் செய்தவன் "கு॒தர ஸாஸ்த்யவகாரஸ்த்வகாரஃ வாகஸ்ரொஜஹஹரிராணஃ" என்றும் குதர சப்தத்தை ஸம்ஸ்க்ருத பதமாகவும், அச்வ வாசகமாகவுமே உதாஹரித்திருக்கின்றனர். இங்ஙனமே, கு॒ட சப்தமும் "கு॒டகௌடில்யே" என்னும் தாதுவுடன் கத ஶிவதுசேர நிஷ்பந்நமான சப்தம். மத்ப பர்கத்தை அபேக்ஷிக்கக் கழுத்திலும், கழுத்தை நோக்க நுனியிலும் கோணலுள்ளது என்பது பற்றிப் பானைக்கு வாசகமாகலாம் என்பதும் எல்லோரும் அங்கீகரித்த விஷயமே. இதனாலன்றோ யாதவன் வைஜயந்தியில் "நிவொவடஃ கு॒டஃ குஹ்லஃ கஸீரஃ கஶுஸீத்ருயி" என்றும், அமரஸிம்ஹன் "வடஃ கு॒ட நிவாவஸ்த்ரீ ஶராவொ வயஶராநகஃ" என்றும் பானைக்கு வாசகமாகவே கூறிப்போந்தனர். ஆகையால் இத்தகையபதங்கள் ஸமஸ்க்ருத பதங்களே யொழிய பர்ஷா மொழிகளல்ல. இவை ஸம்ஸ்க்ருத பாஷையிலிருந்தே தமிழ்ப் பாஷைக்கு வந்து சேர்ந்தவை. மேலும் ஸம்ஸ்க்ருத பாஷைக்குப் பதப்ரதானம் செய்து உபகரிக்கக் கூடிய வேறு பாஷை கிடையாது என்பதைத் தெரிவிப்பதற்காகவே இம்மாதிரி பதங்களையும் இந்த அகராதியில் சேர்த்திருக்கிறேன் என்று ஸவிநயம் விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

திருவல்லிக்கேணி,
15—12—28.

தட்டை. ஸ்ரீநிவாஸன்.

𑌶𑍍𑌰𑍀𑌃

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌵𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃 ।

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍂𑌰𑍂𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

# ஸம்பாதகீயம்.

**கும்பகோணம் ப்ராஹ்மண மஹா ஸபை.**

நாளது மார்கழிமீ 2உ ஞாயிற்றுக்கிழமை திரும் கும்பகோணத்தில் ஒரு பெரிய ப்ராஹ்மண மஹா ஸபை நடைபெற்றது. சென்னைப்பட்டணம் அட்வோகேட் ப்ரஹ்ம ஸ்ரீ டி. ஆர். ராமசந்த்ர ஐயர் அதன் அத்யக்ஷத்வத்தை வஹித்தார். நமது ஸநாதந தர்மத்தில் விச்வாஸமுள்ள அநேக லௌகிக ப்ரபுக்களும் வைதிக வித்வாங்களும் அதற்கு ஸாமாஜிகர்களாக அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்தார்கள். நமது ஆசார ஸம்பந்தமாகப் பல விஷயங்கள் சர்ச்சை செய்யப்பட்டு ந்யாயத்திற்கும் தர்மத்திற்கும் ஒத்த பல தீர்மாநங்களும் நிர்ணயிக்கப்பட்டன. தேசோத்தாரகர்களென்று சொல்லப்படும் சில லௌகிகர்கள் நமது கந்யகைகளின் விவாஹ விஷயமாகச் செய்ய முயலும் சீர்திருத்தங்களைப் பற்றியே முக்யமாக இந்த ஸபையார் விசாரித்து, அவை சாஸ்த்ரங்களுக்கு விருத்தங்களாயிருப்பதுடன் தேசத்தின் தீமையின் பொருட்டேயாகுமென்று பல உபபத்திகளைக் கொண்டு தீர்மாநம் செய்தார்கள். ராஜாங்கத்தில் ப்ராஹ்மணர்கள் விஷயமாக இப்பொழுது புதிதாகச் செய்யப்படும் சில அக்ரமங்களும் தீர்க்கமாக விசாரம் செய்யப்பட்டு, நிஷ்பக்ஷபாதமாக ஸர்வ ஜநங்களுக்கும் பொதுவாய் நடக்கவேண்டிய ராஜாங்கத்தார் இம்மா

திரி ஒரு ஜாதியர் விஷயத்தில் விஷம புத்தியைச் செய்வது பெருத்த அநீதி என்று கண்டிக்கப்பட்டது. இன்னும் இவை போன்ற சில விஷயங்களை விசாரித்து, பிறகு அன்று ஸாயம் அந்த ஸபை கலைந்தது.

தேசத்தின் பொது நன்மையைப் பற்றி ஸகல ஜநங்களும் ஒன்று சேர்ந்து, எல்லாருக்கும் ஒற்றுமையை ஸாதித்துக் கொடுக்கும் உபாயங்களைத் தேட வேண்டியது அவச்யமாக இருக்கும் இக்காலத்தில், ப்ராஹ்மணர்கள் மாத்ரம் தனியாகச் சேர்ந்து சுய நலத்தைத் தேட முயல்வது உசிதமாகுமோ? என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். உண்மையாகவே பொது நன்மையை உத்தேசித்து உழைப்பதே மிக ச்லாக்யமான வ்யாபாரம். ஆனல், மற்றவர்களிடமிருந்து ஆபத் நேரும் போல இருக்கும்பொழுது ஆத்ம ஸம்ரக்ஷணத்தைச் செய்து கொள்ள வேண்டியது அவச்யமன்றோ? அப்படிச் செய்யப்படும் ப்ரயத்நம் தோஷமாகுமோ? தவிரவும், காமம் க்ரோதம் மதம் மாத்ஸர்யம் போன்ற கெட்ட மநோ பாவங்களல்லவோ தோஷத்திற்குக் காரணம்? இந்த மஹா ஸபையைக் கூட்டினவர்களிடம் அவ்வித மநோ பாவங்களொன்றும் இல்லையாதலால், அவர்களுடைய ப்ரவ்ருத்தியைத் தோஷ துஷ்டமென்று எவ்விதத்தில் சொல்லக்கூடும்? இப்பொழுது ப்ராஹ்மணர்களுக்கு எவ்வித ஆபத் நேர்ந்திருக்கின்றது என்பதையும், நிஷ்காரணமாக அவர்கள் மற்றவர்களால் எவ்விதம் த்வேஷிக்கப் படுகிறார்கள் என்பதையும் அறிந்திருக்குமவர்கள், இம்மாதிரி ப்ரவ்ருத்தியில் எவ்வித அஸாதுத்வத்தையும் பார்க்க மாட்டார்கள் என்றே நாம் நம்புகிறோம்.

ப்ராஹ்மணேதர ஹிந்துக்களிடமாவது மற்றை ஜாதியரிடமாவது நமக்கு த்வேஷம் என்பது கொஞ்சமேனும் இல்லை. அவர்களை வருத்தி அதனால் நாம் க்ஷேமத்தை அடைய முயல்கிறோமென்று யாராவது அதிசங்கை செய்தால் அந்த அதிசங்கை நிராதாரமென்று நாம் உறுதியாகச் சொல்வோம்.

"யத்³த்³ரவ்யம் பா³ந்த⁴வாநாம் வா மித்ராணாம் வா க்ஷயே ப⁴வேத் ।
நாஹம் தத³பி⁴ வாஞ்சே²யம் ப⁴க்ஷாந் விஷக்ருதாநிவ ॥"

[பாந்தவாதிகளுடைய நாசத்தால் கிடைக்கும் த்ரவ்யத்தை விஷம் கலந்த பக்ஷ்யங்கள் போல நான் வெறுப்பேன்] என்றும்,

"யத்விநா பரதம் த்வாம் ச ஶத்ருக்நம் வாபி மாநத ।
பவேந்மம ஸுகம் கிஞ்சித் பஸ்ம தத்குருதாம் ஶிகீ ॥"

[பரதன் முதலானவர்களுக்கு இல்லாத ஸுகம் எனக்கு ஒரு பொழுதும் க்ராஹ்யமாக மாட்டாது; அதை நெருப்புச் சாம்பலாகச் செய்யட்டும்] என்றும் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் சொன்ன வார்த்தை நமக்கு எக்காலத்திலும் எவ்விடத்திலும் ப்ரமாணமாக இருக்கின்றது. ஸ்ரீ சரண்யன் நமக்கு இந்த புத்தியை த்ருடப்படுத்தி நம் எல்லாரையும் அநுக்ரஹிப்பானாக.

* * *

**காசியில் ப்ராஹ்மண ஸம்மேளநம்.**

சென்ற ஐப்பசி மாஸத்தில் காசி க்ஷேத்ரத்தில், அகில பாரத வர்ஷீய ப்ராஹ்மண மஹா ஸம்மேளநம் ஒன்று நடை பெற்றதென்று பத்ரிகைகளிலிருந்து நாம் அறிகிறோம். அந்த ஸம்மேளநத்தில் பதினாயிரம் ஜநங்களுக்கு அதிகமாகவே கூட்டம் சேர்ந்ததாம். பண்டிதர்கள் மாத்ரம் ஆயிரம் பெயர்கள் இருந்தார்களாம். அந்த ஸம்மேளநத்திலும் கும்பகோண மஹா ஸபையிற் போல நமது ஆசாரங்களைப் பற்றிய பலசர்ச்சைகள் நடந்தன வென்றும், அந்தச் சர்ச்சைகளெல்லாம் பூர்ணமாக நடை பெற்ற பிறகு அங்கு ஸந்நிஹிதர்களாக இருந்த ஹிந்துக்களெல்லாரும், நமது ஆசார விஷயமாக நமது சாஸ்த்ரங்கள் காண்பிக்கும் மார்க்கமே ஸர்வ ப்ரகாரத்திலும் ச்ரேயஸ்கரமென்று ஏக முகமாகத் தீர்மாநத்தைச் செய்தார்களென்றும் பத்ரிகைகள் கூறுகின்றன. அந்த ஸம்மேளநத்தில் அநேக மஹாராஜர்களும் வந்திருந்தார்களாம். காசியில் பாரதவர்ஷம் முழுவதற்கும் உபயோகப்படும்படி ஒரு பெரிய ஸம்ஸ்க்ருத வித்யாசாலை ப்ரதிஷ்டை செய்யப்படவேண்டும் என்னும் விஷயம் தீர்மானிக்கப்பட்ட பொழுது, அங்கு வந்திருந்த தர்ப்பங்கா மஹாராஜர் அந்த வித்யாசாலை ப்ரதிஷ்டைக்காகத் தாம் ஏகதேசத்தில் ஐந்து லக்ஷ ரூபாய் கொடுப்பதாக வாக் தாநம் செய்ததாகவும், நதட்வாரா லாலாஜீ மொத்தமாய்ப் பதினோராயிர ரூபாயும் பிறகு ஒவ்வொருவருஷமும் ஐயாயிர ரூபாயும் கொடுப்பதாக ப்ரதிஜ்ஞை செய்ததாகவும், இன்னும் அநேக ப்ரபுக்கள் இம்மாதிரி த்ரவ்ய ஸஹாயம் செய்வதாக ஒத்துக்கொண்டதாகவும் நாம் கேள்விப்படுகிறோம். இந்த ஸமாசாரம் நமக்கு மிக்க ஆநந்தத்தைக் கொடுக்கின்றது. இது, முழுவதும் நிறைவேறி ஸ்திர ப்ரதிஷ்டிதமாகும்படி ஸ்ரீ சரண்யன் கடாக்ஷிக்க வேணுமென்பதே பீருக்களான நம்முடைய ப்ரார்த்தநை.

“ப்ரக்ருதிம் புருஷம் சைவ வித்த்யநாதீ உபாவபி ।
விகாராம்ஶ்ச குணாம்ஶ்சைவ வித்தி ப்ரக்ருதிஸம்பவாந்॥” [ப. கீ. 13-19.]
“பூமிராபோऽநலோ வாயு: கம் மநோ புத்திரேவ ச ।
அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதிரஷ்டதா ॥
அபரேயமிதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம் ।
ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத்॥” [ப. கீ. 7-4-5]

---

யான ச்ருதியும் அப்படியே. ‘ப்ரக்ருதிம் புருஷம்’ என்றும் ‘பூமி’ என்றும் ‘ப்ரக்ருதிம் ஸ்வாம்’ என்றும் ‘மயா’ என்றும் ஆரம்பிக்கும் பகவத் கீதா வாக்யங்க

---

திவீ ரூபமான ஸமஷ்டி ஸ்ருஷ்டியைச் செய்து, பூதபாவிநீ—ப்ரபஞ்ச ரூபமான வ்யஷ்டி ஸ்ருஷ்டிக்கும் ஹேதுவாகின்றது. இந்த வாக்யத்திலும் ப்ரக்ருதியே பரிணமிக்கின்றது என்பது சொல்லப்படுகிறது.

‘ப்ரக்ருதிம் புருஷம்..........’—‘ப்ரக்ருதியும் ஆத்மாவும் அநாதிகாலமாகவே சேர்ந்திருக்கின்றன’ என்பதைச் சொல்லுகிறது இந்த வாக்யம். ப்ரக்ருதிம் புருஷம் ச உபாவபி—ஒன்றோடொன்று சேர்ந்திருக்கும் ப்ராக்ருதி புருஷர்களிருவரையும், அநாதீ வித்தி—அநாதியென்று அறி. விகாராந்—ஸம்ஸார பந்தத்திற்குக் காரணமாகும் இச்சை த்வேஷம் முதலிய விகாரங்களும், குணாம்ஶ்ச—மோக்ஷத்திற்குக் காரணமாகும் அமாநித்வம் முதலிய குணங்களும், ப்ரக்ருதி ஸம்பவாந் வித்தி—ப்ரக்ருதியிலிருந்து உண்டாகுமவை யென்று அறி.

“பூமி:......பூமி ஜலம் அக்நி வாயு ஆகாசம் முதலிய பஞ்ச பூதங்களாகவும் மநஸ் முதலான இந்த்ரியமாகவும் மஹத்தாகவும் அஹங்காரமாகவும் ஆக எட்டு விதமாகப் பிரிந்திருக்கும் ப்ரக்ருதியானது என்னைச் சேர்ந்தது என்று அறி. இதனால் ‘அசேதந வஸ்துவாகிற ப்ரக்ருதியைக் காட்டிலும் விலக்ஷணன் பரமாத்மா’ என்று சொல்லப்படுகிறது.

“அபரேயம்............”—இயம் அபரா ப்ரக்ருதி:—கீழ்ச் சொல்லப்பட்ட ப்ரக்ருதியானது என்னுடைய அப்ரதாநமான அம்சம்; இதஸ்த்வந்யாம்—இதைக்காட்டிலும் விலக்ஷணமாயும், ஜீவபூதாம்—ஜீவஸ்வரூபமாயும், பராம்—ப்ரதாநமாயுமிருக்கும், ப்ரக்ருதிம்—ப்ரக்ருதியையும், மே வித்தி—என்னுடையதென்றே அறி. யயா—இந்த ஜீவனால்தான், இதம் ஜகத்—இந்த அசேதந ப்ரக்ருதி முழுவதும், தார்யதே—தரிக்கப்படுகிறது.

[‘ஜீவபூதாம் ப்ரக்ருதிம்’ என்று ஜீவனையும் ‘ப்ரக்ருதி’ என்று வ்யவஹரிப்பது உசிதமாகுமோ? என்று சங்கிக்கலாம். இவ்விடத்தில் ‘ப்ரக்ருதி’ என்பதற்கு

"ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்ய விஸ்ருஜாமி புந: புந:" [ஸ. கீ. 9-8.]

"மயாத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம்" [ஸ. கீ. 9-10]

இத்யாதிகா। ஏவம் ச ப்ரக்ருதேரபி பரமாத்மசரீரத்வாத் ப்ரக்ருதி சப்த: ததாத்மபூதஸ்ய தத்ப்ரகாரஸம்ஸ்திதஸ்ய வாசக:, புருஷசப்தோऽபி ததாத்மபூதஸ்ய தத்ப்ரகாரஸம்ஸ்திதஸ்ய வாசக:। அதஸ்தத்விகாராணாமபி ததைவேத்வ க்ருத்வா; ததாஹ

---

ளும் அதையே வற்புறுத்துகின்றன. [நாங்கள் சொல்வதில் இம்மாதிரியான அநுபபத்தி ஒன்றுமில்லை.] ஏனென்றால், ஈச்வரனுக்கு ப்ரக்ருதியும் சரீரம், ஜீவனும் சரீரமாகையால் ப்ரக்ருதி சப்தம் ஜீவசப்தம் இவை இரண்டும், அந்த ப்ரக்ருதி ஜீவன் இவை யிரண்டையும் ப்ரகாரமாக உடைத்தாயும் அவ்வவற்றிற்கு ஆத்மாவாகவுமிருக்கும் ஈச்வரனையே சொல்லும். ஆகையால் 'வ்யக்தம்' இத்யாதியான புராண

---

'விபூதி' என்று அர்த்தம் கொள்ளவேண்டும். ப்ராக்ருதி புருஷன் இவர்களின் சேர்க்கையால் ஏற்படும் ப்ரபஞ்சம் முழுவதும் பகவானுடைய விபூதிகளே.]

"ப்ரக்ருதிம் ஸ்வாம்........"—ஸ்வாம்-என்னுடையதான, ப்ரக்ருதிம்—விசித்ரமான மாறுதல் அடையக்கூடிய ப்ரக்ருதியை, அவஷ்டப்ய—எட்டுவிதமாகப் பரிணமிப்பித்து, புந:புந: விஸ்ருஜாமி-அந்தர்தக் காலங்களில் ஸ்ருஷ்டிக்கிறேன்.

"மயா........"—அத்யக்ஷேண—ஸத்ய ஸங்கல்பனாக இருக்கும் என்னால் ஸங்கல்பிக்கப்பட்டதாய்க் கொண்டு, ப்ரக்ருதி:—இந்த ப்ரக்ருதியானது, ஸசராசரம் ஸூயதே—சராசர மடங்கியுள்ள இந்த ஜகத்தை உண்டுபண்ணுகிறது.

இந்த ச்லோகங்களுள் முதல் ச்லோகமானது ப்ரக்ருதி புருஷர்களின் அநாதித் தன்மையையும், மற்றை ச்லோகங்கள் ப்ரக்ருதியின் பரிணமிக்கும் தன்மையையும் குறிக்கின்றனவென்று அறியவேண்டும்.

ஏவம் ச—இவ்வாறு 'ப்ரஹ்மமே ஜீவனாகவும் ப்ரக்ருதியாகவும் பரிணமிக்கின்றது' என்னும் கக்ஷியின் மீது தூஷணங்களைச் சொல்லிவிட்டு, இனி தனது ஸமாதானத்தைச் சொல்லுகிறார். 'ப்ரக்ருதி' 'ஜீவன்' இந்தச் சப்தங்களால் அவைகளுக்கு ஆத்மாவாக இருக்கும் பரமாத்மாவே சொல்லப்படுகிறபடியால், ப்ரக்ருதி புருஷர்கள் ஜகத்தாக ஆகிறார்கள் என்று சொல்லுகையில் ஈச்வரனுக்கே உபாதாந காரணத்வம் சொல்லப்பட்டதாகின்றது என்பது தாத்பர்யம்.

"𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑍍𑌤𑌥𑌾𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌕𑌾𑌲 𑌏𑌵 𑌚 ।
𑌸 𑌏𑌵 𑌕𑍍𑌷𑍋𑌭𑌕𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌕𑍍𑌷𑍋𑌭𑍍𑌯𑌶𑍍𑌚 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ॥" [𑌵𑌿. 𑌪𑍁]

𑌇𑌤𑌿 । 𑌅𑌤𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌭𑍂𑌤𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌂𑌶𑍇 𑌵𑌿𑌕𑌾𑌰𑌃, 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍍𑌯𑌂𑌶𑍇 𑌚𑌾𑌵𑌿𑌕𑌾𑌰𑌃 । 𑌏𑌵𑌮𑍇𑌵 𑌜𑍀𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌭𑍂𑌤𑌜𑍀𑌵𑌾𑌂𑌶𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌚𑌾𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌾𑌃, 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍍𑌯𑌂𑌶𑍋 𑌨𑌿𑌯𑌨𑍍𑌤𑌾 𑌨𑌿𑌰𑌵𑌦𑍍𑌯𑌃 𑌸𑌕𑌲𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌾𑌕𑌰𑌃 𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪 𑌏𑌵 ।

𑌤𑌥𑌾 𑌚 𑌸𑌤𑌿, '𑌕𑌾𑌰𑌣𑌾𑌵𑌸𑍍𑌥𑌃 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰 𑌏𑌵; 𑌤𑌦𑍁𑌪𑌾𑌦𑌾𑌨𑌕𑌜𑌗

---

வாக்யங்கள் சொல்வது போல, அந்த ப்ரக்ருதியும் ஜீவனும் சேர்ந்து ஏற்படும் ப்ரபஞ்சத்திற்கும் அந்த ஈச்வரனே ஆத்மா. ஆகையால், ப்ரக்ருதியை ப்ரகாரமாக உடைத்தாயிருக்கும் பரமாத்மாவினிடத்தில் ப்ரகாரமாய் நிற்கும் ப்ரக்ருதி மாத்ரம் மாறுதல் அடைகின்றது; ப்ரகாரியாய் நிற்கும் பரமாத்மா எவ்வித மாறுதலையும் அடைவதில்லை. அம்மாதிரியே ஜீவனை ப்ரகாரமாக உடைத்தாயிருக்கும் பரமாத்மாவினிடத்தில் ப்ரகாரமாய் நிற்கும் ஜீவனுக்கு மாத்ரம் அபுருஷார்த்த ஸம்பந்தம் ஏற்படுகின்றது; ப்ரகாரியாய் நிற்கும் பரமாத்மா ஸகல வஸ்துக்களையும் நியமநம் செய்துகொண்டு ஸ்வயம் எவ்வித தோஷமுமற்றதாய் ஸகல கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமாய் ஸத்ய ஸங்கல்பமாகவே இருக்கின்றது.

**𑌤𑌥𑌾 𑌚 𑌸𑌤𑌿.........𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿**—இப்படி, ப்ரக்ருதியையும் ஜீவனையும் ப்ரகாரமாக உடைய ஈச்வரன் ஜகத்துக்குக் காரணமாயும், அந்த ஈச்வரனே அவை

---

**𑌤𑌦𑍍𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌣𑌾𑌮𑌪𑌿**—'ப்ரக்ருதி புருஷன் இந்த இருவர்களுக்கு மாத்ரம் ஈச்வரன் ஆத்மா வென்பது இல்லை; இவர்களின் விகாரமாகிய ஜகத் முழுவதற்குமே அவன் ஆத்மா; ஆகையால் கார்யமாகிற ஜகத் அவனே என்பது குறிக்கப்படுகின்றது.

'**𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂.........**'—காரண தத்வமும் பரமாத்மா, கார்யம் முழுவதும் பரமாத்மாதான் என்பதை இந்த வாக்யம் விளக்குகின்றது.

**𑌅𑌤𑌃**—இப்படிச் சொல்லும் பக்ஷத்தில் ஒருவித விரோதமுமில்லை என்பதைச் சொல்லுகிறார். 'ப்ரஹ்மம் தோஷமற்றது, அது விகாரமற்றது, அதுவே ஜகத்திற்கு உபாதாந காரணம்' என்று சொல்லும் ச்ருதி வாக்யங்களெல்லாம் ஒன்றோடொன்று விரோதியாமல் ஸமந்விதங்க ளாகின்றன என்பது குறிப்பு.

**𑌕𑌾𑌰𑌣𑌾𑌵𑌸𑍍𑌥𑌃 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃, 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌵𑌸𑍍𑌥𑍋𑌽𑌪𑌿 𑌸 𑌏𑌵**—'சிதசித் விசிஷ்டனான ஈச்வரன் காரணம், அப்படி விசிஷ்டனாக இருக்கும் ஈச்வரனே கார்யம்' என்றால், கார்யம் காரணம் இரண்டும் வெவ்வேறல்ல என்று சொன்னதாகுமன்றோ? அதுதான் இங்கு விவக்ஷிதம்.

ர்யாவஸ்தோऽபி ஸ ஏவ' இதி கார்யகாரணயோரநந்யத்வம், ஸர்வ ஶ்ருத்யவிரோதஶ்ச பவதி। ததேவம் நாமரூபவிபாகாநர்ஹஸூக்ஷ்ம தஶாபந்நப்ரக்ருதிபுருஷஶரீரம் ப்ரஹ்ம காரணாவஸ்தம், ஜகதஸ்ததா பத்திரேவ ச ப்ரலய:; நாமரூபவிபாகவிபக்தஸ்தூலசிதசித்வஸ்து

---

களை ப்ரகாரமாகக்கொண்டு ஜகத்தாயிருக்கும் கார்யமாயுமிருக்கிறான் என்று ஒத்துக்கொண்டால் மாத்ரம் காரணமும் கார்யமும் ஒன்றே என்று சொல்வது உபபந்நமாகும்; ச்ருதி விரோதங்களும் ஏற்படமாட்டா; [ஜகத்தின் ஸ்ருஷ்டி ப்ரளயங்களும் உபபந்நங்களாகும்.] 'ப்ரக்ருதி ஜீவன் இவை இரண்டுக்கும், இதுபெயர் இது ரூபம் என்று விவேசித்துச் சொல்லக்கூடாமலிருக்கும் ஒரு ஸூக்ஷ்மதசையும், இதுதான்பெயர் இதுதான் ரூபம் என்று விவேசித்துச் சொல்லக்கூடிய ஒருஸ்தூல தசையும் ஆக இரண்டு தசைகள் உண்டு. அவைகள் முதல் தசையில் இருந்துகொண்டு ஈச்வரனுக்குச் சரீரமாகும் பொழுது ஈச்வரனைக் காரணாவஸ்தையில் இருக்கும் ப்ரஹ்மமென்றும், இரண்டாவது தசையில் இருந்து

---

ஸர்வச்ருத்யவிரோத:—ஈச்வரன் ஜகத்துக்கு உபாதாந காரணம் என்பதை ஒத்துக்கொண்டால், 'ஈச்வரன் நிர்விகாரன்' என்று சொல்லும் ச்ருதி விரோதிக்கும் போல் தோன்றும். 'ஈச்வரன் நிர்விகாரன்' என்னும் ச்ருதியை ஒத்துக்கொண்டால், 'அவன் உபாதாந காரணம்' என்று சொல்லும் ச்ருதி விரோதிக்கும் போல் தோன்றும். இப்பொழுது, 'உபாதாநத்வ ச்ருதி விசிஷ்ட ப்ரஹ்ம விஷயம் நிர்விகாரத்வ ச்ருதி விசேஷ்யாம்ச மாத்ர விஷயம்' என்று கீழ் விவரித்திருப்பது போல நாம் ஒத்துக்கொள்ளும் பக்ஷத்தில் ஒருவித விரோதமும் வரமாட்டாது என்பது ஸ்பஷ்டம்.

ததேவம்—இவ்விடத்தில் வேறொரு சங்கை நிவ்ருத்தி செய்யப்படுகிறது. அது என்னவென்றால்: 'சிதசித் விசிஷ்டமான ப்ரஹ்மம் நித்யமாகையால் அதற்கு ஸ்ருஷ்டி ப்ரளயங்கள் எப்படி ஸம்பவிக்கும்?' என்பதுதான். த்ரவ்யம் நித்யமாக இருந்தாலும் அவஸ்தா பேதத்தால் ஸ்ருஷ்டி ப்ரளயங்கள் உபபந்நங்களாகும் என்பது ஸமாதாநம்.

ஸூக்ஷ்மதசா—சேதந வஸ்துக்கள் அசேதந வஸ்துக்கள் ஆகிய இவை இரண்டும் ஸ்ருஷ்டிக்கு முன் நாம ரூபங்களற்றவைகளாய் இருக்கும். அப்பொழுது சேதந வஸ்துக்களெல்லாம் அசேதந வஸ்து ப்ராயங்களாகவே தென்படும். அப்படி இருக்கும் அவஸ்தையை ஸூக்ஷ்மாவஸ்தை என்று சொல்வார்கள்.

ததாபத்தி:—ததவஸ்தா ப்ராபத்தி:. அதாவது, அந்த ஸூக்ஷ்ம தசையின் ஆபத்தி என்று சொன்னதாயிற்று.

𑌶𑌰𑍀𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌵𑌸𑍍𑌥𑌂, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌸𑍍𑌥𑍂𑌲𑌭𑌾𑌵𑌶𑍍𑌚 𑌜𑌗𑌤𑌃 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇। 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌪𑌰𑌾𑌶𑌰𑍇𑌣

“𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌪𑍁𑌂𑌸𑍋𑌰𑌜𑌯𑍋𑌃 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌭𑍂𑌤𑌯𑍋𑌃”

𑌇𑌤𑌿। 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌭𑍂𑌤𑌸𑌰𑍍𑌵𑌾𑌵𑌸𑍍𑌥𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑌾𑌚𑌿𑌨𑌃 𑌶𑌬𑍍𑌦𑌾𑌃 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑌯𑌾𑌽𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌮𑍁𑌖𑍍𑌯𑌤𑌯𑌾 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇, 𑌜𑍀𑌵𑌾𑌤𑍍𑌮𑌵𑌾𑌚𑌿𑌦𑍇𑌵𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑌬𑍍𑌦𑌵𑌤𑍍; 𑌯𑌥𑌾 𑌦𑍇𑌵𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑌬𑍍𑌦𑌾 𑌦𑍇𑌵𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌣𑌾𑌂 𑌜𑍀𑌵𑌾𑌤𑍍𑌮

---

கொண்டு சரீரமாகும் பொழுது ஈச்வரனைக் கார்யாவஸ்தையில் இருக்கும் ப்ரஹ்மமென்றும் நாம் சொல்லுகிறோம். அவைகள் ஸூக்ஷ்ம தசையை அடைவதுதான் ஜகத்தின் ப்ரளயம்; அவைகள் ஸ்தூல தசையை அடைவதுதான் ஜகத்தின் ஸ்ருஷ்டி' என்பதே உபபத்தி. பகவான் பராசர மஹர்ஷியும் இம்மாதிரியே சொல்லியிருக்கிறார். [ப்ரதானம் புருஷன் இரண்டும் பிறப்பற்றவை. அவைகளே கார்யாவஸ்தையிலிருக்கும் ப்ரதான புருஷர்களுக்குக் காரணங்கள்.] ஆகையால், ப்ரக்ருதி புருஷர்களைச் சொல்லும் சப்தங்களெல்லாம், அந்த ப்ரக்ருதி புருஷர்கள் எந்த அவஸ்தையில் இருந்தபோதிலும், பரமாத்மாவையே முக்யமாகக் குறிக்கின்றன; ப்ரகாரமாயிருக்குமவைகளைச் சொல்லும் சப்தங்களெல்லாம் அந்த ப்ரகாரத்துடன் இருக்கும் ப்ரகாரியையே முக்யமாகக் குறிக்கவேண்டுமன்றோ? இந்த நியமத்தை நாம் ஜீவாத்ம விஷயத்தில் பார்க்கலாம். ஜீவாத்மாக்களைக் குறித்து, அவைகளுடைய சரீரங்களாகிற தேவரூப மநுஷ்யரூப ப்ரக்ருதி பரிணாமங்களெல்லாம் ப்ரகாரங்கள்; ஜீவாத்மா ப்ரகாரி. இந்தக் காரணத்தால், ப்ரகாரமாக இருக்கும் தேவ மநுஷ்ய ரூபங்களைச் சொல்லும் சப்தங்களெல்லாம் ப்ரகாரியாயிருக்கும் ஜீவாத்மாவையே முக்யமாகக் குறிக்கின்றன.

---

𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌪𑍁𑌂𑌸𑍋𑌃—இந்த ச்லோகம், வஸ்து ஸ்வரூபம் நித்யமாக இருந்தபோதிலும், அவஸ்தா பேதத்தால் அவைகளுக்குக் காரணத்வமும் கார்யத்வமும் உபபந்நமாகும் என்பதற்கு ப்ரமாணமாக இவ்விடத்தில் சொல்லப்படுகின்றது. '𑌅𑌜𑌯𑍋𑌃' (பிறப்பற்றவை) என்பதால் அவைகளின் நித்யத்வம் விளங்குகின்றது; '𑌕𑌾𑌰𑍍𑌯𑌭𑍂𑌤𑌯𑍋𑌃' என்பதால் அவஸ்தா பேதமுண்டு என்பது சொல்லப்படுகின்றது.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍—இப்படி, காரணம் கார்யம் இரண்டும் வெவ்வேறல்ல என்பது ஏற்பட்டால், அப்பொழுது கார்யத்தைச் சொல்லும் சப்தங்களெல்லாம் அந்தக் கார்யத்தின் வழியாகக் காரணத்தையே முக்யமாகக் குறிக்க வேண்டுமன்றோ? ஒரு சப்தமானது எந்த அர்த்தத்தில் முடிந்து நிற்கின்றதோ அதை முக்யார்த்தமென்று சொல்வார்கள். எல்லா சப்தங்களும் பகவானிடத்திலேயே முடிந்து நிற்கிறபடியால் அவனே அவைகளுக்கு முக்யார்த்தமாகிறான்.

ப்ரகாரதயைவ பதார்த்தத்வாத் ப்ரகாரிணி ஜீவாத்மநி பர்யவஸிததயா பதத்வேந। தஸ்மாத் ஸர்வஸ்ய அசித்வஸ்துந: பரமாத்மஶரீரதயா தத்ப்ரகாரத்வாத் பரமாத்மநி பர்யவஸிததயா பதத்வேந ஸர்வே தத்வாசகா: ஶப்தா:। அயமேவ ஆத்மஶரீரபாவ:—ப்ருதக்ஸித்த்யநர்ஹாதாராதேயபாவோ நியந்த்ருநியாம்யபாவ: ஶேஷஶேஷிபாவஶ்ச। ஸர்வாத்மநா ஆதாரதயா

---

அது போலவே ஸகல சேதநாசேதந வஸ்துக்களும் பரமாத்மாவுக்குச் சரீரமாயிருந்து கொண்டு ப்ரகாரங்களாகிறபடியால், அந்தச் சேதநாசேதந வஸ்துக்களைச் சொல்லும் சப்தங்களெல்லாம் பரமாத்மாவி னிடத்திலேயே முக்யமாக வர்த்திக்கின்றன. ஆத்ம சரீர பாவம் என்பது இதுவே; ஒரு த்ரவ்யம் மற்றொரு த்ரவ்யத்தால் எப்பொழுதும் தரிக்கப்படுவதாயும் எப்பொழுதும் நியமிக்கப்படுவதாயும் எப்பொழுதும் அந்த மற்றொரு த்ரவ்யத்திற்குச் சேஷமாயும் இருந்தால், அந்த த்ரவ்யத்தைச் சரீரமென்றும் மற்

---

ஆத்மஶரீரபாவ:—'ஈச்வரனே ஆத்மா; அவனைத் தவிர்த்த சேதநாசேதந வஸ்துக்களெல்லாம் அவனுக்குச் சரீரம்' என்பது நமது அஸாதாரணமான கொள்கை. 'லோகத்தில் சரீரம் என்று சொல்லப்படும் பொருளானது இந்த்ரியங்களுக்கு இருப்பிடமாகவும் சலநம் முதலான சேஷ்டைகளுக்கு ஆச்ரயமாகவும் காணப்படுகின்றது. அப்படி இந்தச் சேதநாசேதநங்கள் ஈச்வரனுக்கு இந்த்ரியாச்ரயமாகவும் சேஷ்டாச்ரய மாகவும் இருந்தாலன்றோ நாம் அவைகளை ஈச்வரனுடைய சரீரமென்று சொல்லக்கூடும்? அவை அப்படி இல்லையாகையால் அவைகளைச் சரீர மென்று எவ் விதத்தில் சொல்லலாம்?' என்று ஒரு ஆக்ஷேபத்தைச் சங்கித்துக் கொண்டு அதற்கு ஸமாதாநம் சொல்லுகிறார். 'சேஷ்டை இந்த்ரியங்கள் இவைகளுக்கு ஆச்ரயமாயிருப்பது சரீரம்' என்று சரீரத்திற்கு லக்ஷணம் சொல்வது தோஷ துஷ்டம். 'எந்த த்ரவ்யமானது தனது ஸத்தையுள்ள காலமெல்லாம் மற்றொன்றால் தரிக்கப்படுவதாயும் நியமிக்கப்படுவதாயும் சேஷமாயும் இருக்கின்றதோ அந்த த்ரவ்யமே சரீரம்; மற்றொன்று அதற்கு ஆத்மா' என்னும் லக்ஷணமே நிர்த்துஷ்டம் என்று நமது ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். தவிரவும், இவ்விதமான லக்ஷணத்தை அங்கீகரியாவிடில், "யஸ்யாத்மா ஶரீரம்" "யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்" இத்யாதியான ச்ருதி வாக்யங்களில் காணப்படும் சரீர சப்தத்திற்கு முக்யார்த்தத்தைப் பரித்யஜித்து லக்ஷணை கல்பிக்கும்படி ப்ரஸங்கிக்கும். அது ஸ்வரஸ மன்று.

ப்ருதக்ஸித்த்யநர்ஹ—ஆத்மா சரீரத்தைத் தரிப்பது நியமிப்பது முதலானவை அந்தச் சரீரம் உள்ள காலமெல்லாம் இருக்கின்றன என்பதை இந்தப் பதம் காண்பிக்கின்றது. ஆகையால் ஸ்வல்பகாலம் மாத்ரம் ஆதேயமாயும் நியாம்யமாயும் சேஷமாயும் இருக்கும் க்ருஹ க்ஷேத்ரம் முதலானவை யஜமாநனுக்குச் சரீரமாகமாட்டா. ஆத்மா

நியந்த்ரதயா சேஷிதயா ச ஆப்நோதீதி 'ஆத்மா'; ஸ்வஸத்தயா ஆதேயதயா நியாம்யதயா சேஷதயா ச அபருதக்ஸித்த்யா ப்ரகாரதயா 'ஆகாரம்' 'சரீரம்'।

---

றொன்றை ஆத்மாவென்றும் சொல்வார்கள். ஆத்ம சப்தத்தின் அவயவார்த்தமும் இதையே குறிக்கின்றது. அடைகிறான் (ஆப்நோதி) ஆகையால் ஆத்மா. அதாவது அந்த த்ரவ்யம் இருக்கும் வரையில் அதை இது ஆதாரமாகவும் நியந்தாவாகவும் சேஷியாகவும் அடைகிறபடியால் இது ஆத்மாவாகின்றது என்று சொன்னதாயிற்று. அம்மாதிரியே அந்த த்ரவ்யமும் தான் உள்ளவரையில் மற்றொன்றால் தரிக்கப்படுவதாயும் நியமிக்கப்படுவதாயும் அந்த மற்றொன்றுக்குச் சேஷமாயும் இருந்துகொண்டு, அந்த மற்றொரு த்ரவ்யத்தை விட்டுத் தனித்து நிற்க அநர்ஹமான ப்ரகாரமாய் இருக்கிறபடியால்,

---

சரீரத்தைத் தரிக்கின்றது என்னுமிடத்தில் சொல்லப்படும் தாரணமும், தொன்னை நெய்யைத் தரிப்பது போலன்று; ஒரு வ்யாப்ய வஸ்துவினுள் ஒரு வ்யாபக வஸ்து ப்ரவேசித்து அப்படிப்பட்ட வ்யாப்தியால் ஏற்படும் தாரணத்தையே சொல்லுகின்றது.

சேஷசேஷிபாவ:—எந்த வஸ்துவின் ஸத்தை ஸ்திதி ப்ரவ்ருத்திகளெல்லாம் மற்றொரு வஸ்துவின் அதிசயத்தின் பொருட்டே ஆகின்றதோ, அந்த வஸ்துவைச் சேஷமென்றும் மற்றொரு வஸ்துவைச் சேஷியென்றும் சொல்வார்கள். வஸ்த்ர பூஷணம் முதலியவை நமது தேஹத்திற்குச் சேஷ பூதங்கள்; தேர்ச்சீலை தேருக்குச் சேஷ பூதம். இம்மாதிரியே சேதநாசேதந வஸ்துக்களெல்லாம் ஈச்வரனுக்குச் சேஷ பூதங்கள் என்பது இவ்விடத்திற் சொல்லப்படுகிறது. அசேதநங்கள் மாத்ரம் இம்மாதிரி சேஷங்களாக இருக்கத் தகுந்தவை என்னும் நியமமில்லை. அசேதநங்கள் போலவே சேதந வஸ்துக்களும் பரார்த்தங்களே என்பது கருத்து. நாம் இருப்பதும் அநுபவிப்பதும் நம்முடைய அதிசயத்தின் பொருட்டு ஆகவில்லையோ? என்று ஒரு சங்கை ஜநிக்கலாம். 'இல்லை; நமது அதிசயம் அதற்கு முடிவன்று. ஈச்வரனுடைய த்ருப்தியே எல்லாவற்றிற்கும் பர்யவஸாநம்' என்பது ஸமாதாநம். இதைப்பற்றி மேலே விவரணம் செய்யப்படப் போகின்றது.

ஸ்வஸத்தயா—இதற்கு 'அந்த த்ரவ்யம் இருக்கும் காலமெல்லாம்' என்பது பொருள்.

ஆப்நோதீதி ஆத்மா—இந்த அவயவார்த்தம் கீழ்ச் சொல்லப்பட்டுள்ள சரீர சரீரி லக்ஷணத்தைக் காண்பிக்கின்றது.

ஆகாரம் சரீரமிதி ச—கோ (பசு) வுக்குக் கோத்வமாகிற ஜாதியும் ஜலத்திற்குச் சைத்யமாகிற குணமும் அப்ருதக்ஸித்த ப்ரகாரங்களானதால் 'ஆகாரங்கள்'

ஏவமேவ ஹி ஜீவாத்மந: ஸ்வசரீரஸம்பந்த:। ஏவமேவ பரமாத்மந: ஸர்வ-சரீரத்வேந ஸர்வ-சப்³த³வாச்யத்வம் । ததா²ஹ ச்ருதிக³ண:

"ஸர்வே வேதா³ யத்பத³மாமநந்தி
ஸர்வே வேதா³ யத்ரைகம் ப⁴வந்தி"

இதி । தஸ்மிந்நேகஸ்மிந் வாச்யத்வாதே³காத்⁴யவாசிநோ ப⁴வந்தீத்யர்த²: ।

---

அது ஆகாரமென்றும் சரீரமென்றும் சொல்லப்படுகிறது. ஜீவாத்மாவுக்கும் தனது சரீரத்துக்கும் உள்ள ஸம்பந்தம் இப்படிப்பட்டதே. ஸர்வ வஸ்துக்களையும் சரீரமாயுடைய பரமாத்மாவுக்கும், ஸமஸ்த சப்தங்களாலும் முக்யமாய்க் குறிக்கப்படும் தன்மை இவ்விதமே ஸம்பவிக்கின்றது. இதையே அநேகச்ருதிகள் சொல்லுகின்றன. முதலில் "ஸர்வே வேதா:" இத்யாதியான ச்ருதி வாக்யம் இதற்கு ப்ரமாணம். இந்த வாக்யத்திலுள்ள "ஸர்வே வேதா யத்ரைகம் ப⁴வந்தி" என்பதன் அர்த்தம் என்னவென்றால்; சொல்லத் தகுந்த வஸ்து ஒன்றாகவே இருக்கிறபடியால் எல்லா வேதங்களும் ஒரே

---

என்று சொல்லப்படும்; அதே மாதிரி சரீரத்தையும் சரீரிக்கு ஆகாரமென்று சொல்லலாம். ஆனால், இந்தச் சரீரம் அப்ருதக் ஸித்த ப்ரகாரமாயிருப்பதுடன் ஜாதி குணமின்றிக்கே த்ரவ்யமாக இருக்கிறபடியால் இதற்குச் சரீரமென்றும் வ்யவஹாரம் ஏற்படுகின்றது. அதாவது, எது அப்ருதக்ஸித்த ப்ரகாரமாயிருப்பதுடன் த்ரவ்யமாகவும் இருக்கின்றதோ அது சரீரம் என்று சொன்னதாயிற்று.

ஏவமேவ ஹி—கீழ்ச் சொல்லப்பட்டுள்ள சரீர லக்ஷணத்திற்கு இந்த வாக்யத்தினால் வ்யாப்தி காண்பிக்கப்படுகிறது.

ஏவமேவ—இப்படி ஜகத்துக்கும் ப்ரஹ்மத்திற்கும் சரீர சரீரி பாவம் இருக்கிறபடியால், ஜகத்திலுள்ள வஸ்துக்களைச் சொல்லும் ஸகல சப்தங்களும் ப்ரஹ்ம பர்யந்தம் முக்யமான அர்த்தமுள்ளவையாக இருக்கின்றன என்பது ஏற்படுகின்றது. இவ்வளவால் ப்ரஹ்மத்திற்கு ஸர்வ சப்த வாச்யத்வம் ஸ்தாபிக்கப்பட்டது. இனி இதற்கு ச்ருதி ஸ்ம்ருதி ப்ரமாணங்களைச் சொல்லுகிறார்.

"ஸர்வே வேதா³ யத்பத³மாமநந்தி"—எல்லா வேதங்களும் எந்த ப்ராப்ய வஸ்துவை ப்ரதிபாதிக்கின்றனவோ. 'பத்³யத இதி பத³ம்' என்னும் வ்யுத்பத்தியால் 'ப்ராப்யம்' (அதாவது, நம்மால் அடையத் தகுந்த வஸ்து) என்னும் அர்த்தம் கிடைக்கின்றது. "ஸர்வே வேதா³ யத்ரைகம் ப⁴வந்தி" எல்லா வேதங்களாலும்

ஶ்ரீ:

ஶ்ரீரங்கநாயிகாஸமேத ஶ்ரீரங்கநாயகபரப்ரஹ்மணே நம:

ஶ்ரீவாதூலவம்ஶகுலபயோதிகௌஸ்துபேன தந்த்ரத்வயபாரா

வாரபாரீணேன ஶ்ரீமஹாசார்யபாதேன விரசித:

# ॥ பரிகரவிஜயாக்யோ க்ரந்த: ॥

ஶ்ரீவாதூலகுலதிலகாயமானதந்த்ரத்வயபாராவார

பாரீணஶ்ரீக்ருஷ்ணஸூரிப்ரமுகாசார்யசரணஸேவா

ஸமதிகதஸார்வஜ்ஞ்யேன

ஶ்ரீவாதூலவம்ஶ்யஶ்ரீநிவாஸஸூரிணா விரசிதயா

வ்யாக்யயா ஸமேத:

தேனைவ தத்தத்ப்ரௌடநீதபஹுக்ரந்தஸாஹாய்யேன விஶோதிதஶ்ச

விஜயதேதராம் ।


சென்னை :

சுதேசமித்ரன், பிராஞ்சு அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

கலியுகாதி 5029, விபவ ஹூ

[1929.]

ஸ்ரீ:

# முகவுரை.

'பரித்ராணாய ஸாதூநாம்' என்கிற ஸ்ரீ கீதா வாக்யத்தின்படியே ஸாது ஸம்ரக்ஷணார்த்தமாக அநேக ரூபமாக இங்கு அவதரித் தருளுகிற ஸர்வேச்வரன், அஸாரமான இந்த ஸம்ஸார ஸாகரத்தின் நடுவிலே நிமக்நனாய்க் கரையேறும் வழி யறியாதே, 'ஆவாரார் துணை' யென்று அலமந்து வருந்துகிற ஸம்ஸாரி சேதநோஜ்ஜீவநார்த்தமாக நம் பூர்வாசார்யர்களாக அவதரித்துத் தனது தத்வ ஜ்ஞாநங்களாகிற திருக்கைகளினால் அவர்களைக் கரையேற்றி யருளுகிறான் என்கிற விஷயத்தை, 'ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் । மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா ॥' என்பது முதலான ப்ரமாணங்கள் ப்ரதிபாதிக்கின்றன. இப்படி அவதரித்த ஆசார்யர்களுக்குள் சில ஆசார்யர்கள் ஆநந்த மயனான ஸர்வேச்வரனுடைய அதி போக்ய தமங்களான கல்யாண குணங்களுடைய அநுபவமாகிற அம்ருதாஸ்வாத த்ருப்தர்களாய் அவ்வாநந்தாநுபவாபேக்ஷையோடு தங்கள் திருவடிகளை யாச்ரயித்த முதலிகளுக்கு அவ்வாராவமுதத்தின் அநுபவ பரீவாஹமான செவிக்கினிய செஞ்சொல்லை உபதேசித்து அவர்களை உஜ்ஜீவிப்பித்துப் போந்தார்கள். மற்றும் சில மஹோதாரர்கள் இவ்வுபதேச மாத்ரத்தினால் த்ருப்தியடையாதவர்களாய், பின்பு உண்டாகப்போகிற புருஷர்களுடைய உஜ்ஜீவநத்தையும் தங்களுடைய புருஷார்த்தமாகத் திருவுள்ளம் பற்றி, அநந்தங்களான சாஸ்த்ர ரத்நாகரங்களிலிருந்து தாங்கள் ச்ரமப்பட்டு ஸம்பாதித்துச் சேர்த்தநுபவித்த அதிஸூக்ஷ்மார்த்தங்களாகிற மஹா ரத்நங்களை யாவரும் எக்காலத்திலும் ஹ்ருதயங்கமமாக எளிதில் அநுபவித்து வாழும்படி அநேக க்ரந்த ரூபமாகவும் நிபந்தித்து உபகரித்தருளினார்கள்.

இப்படி மஹோபகாரம் செய்தருளின ஆசார்யர்களுக்குள் ஸர்வேச்வரனுடைய கண்டாவதார ரூபமாய் அவதரித்து, கவிதார்க்கிக ஸிம்ஹமென்றும் வேதாந்தாசார்யரென்றும் ஸுப்ரஸித்த வைபவத்தை உடையவராய்த் தமது வாத உபதேசாதிகளுடைய அதிசயத்தினாலும் பஹுமுக க்ரந்தங்களினாலும் பரபக்ஷ ப்ரதிக்ஷேப பூர்வகமாக ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ரக்ஷணம் செய்து ஜகதுஜ்ஜீவநம் பண்ணி யருளின ஸ்ரீநிகமாந்த தேசிகனுடைய காலத்திற்குப் பிறகு பரகாலாதிகளால் மங்களாசாஸநம் செய்யப்பட்ட சோளஸிம்ஹபுரமென்கிற திவ்ய தேசத்தில் வாதூல வம்ச திலகராய் வந்தவதரித்து ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்யாதி கல்யாண குணங்களினால் நிஸ்ஸமாப்யதிகராக எழுந்தருளி யிருந்தபடியாலே 'மஹாசார்ய' ரென்று எல்லாராலும் கொண்டாடப்பட்ட ஸ்ரீராமாநுஜாசார்ய ஸ்வாமி, அஸர்வஜ்ஞ துர்ஜ்ஞேயங்களான சததூஷணீ முதலான ஸ்ரீ தேசிக க்ரந்தங்களுக்குச் சண்டமாருதாதி வ்யாக்யாநங்களைச் செய்தருளினதுடன் பஞ்சமத பஞ்சநங்களான பாராசர்ய விஜயாதி

க்ரந்த ரத்நங்களையும் அருளிச்செய்து, அவைகளில் அந்யமத நிஷ்டங்களான அநந்த தோஷங்களையும் ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தினுடைய குணாதிசயங்களையும் எளிதில் யாவரும் அறிந்துகொள்ளும்படி விஸ்தாரமாக வர்ணித்திருப்பதால் இந்த ஸ்வாமி ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்துக்குச் செய்திருக்கும் உபகாராதிசயங்கள் வாங்மநஸாகோசரங்களென்பதை யாவரும் அறிந்திருக்கலாம்.

ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வானுடைய பக்தியின் பெருமையைப் போல இவருடைய பகவத் பக்த்யதிசயத்தை, முன்பொரு காலத்தில் பேரருளாளனுடைய உத்ஸவ காலத்தில் கருடாரூடனான ஸ்ரீ வரதனை ஸேவிக்க ஆஸைப்பட்ட இவர் சக்திக் குறைவினால் சோளஸிம்ஹ புரத்திலிருந்தபடியே அவ்வெம்பெருமானை த்யானிக்க, அக்காலத்தில் ஸ்ரீ காஞ்சியில் கருடாரூடனாய்த் திருவீதியை அலங்கரிக்க எழுந்தருளின ஸ்ரீ வரதன் இவர் இருக்கும் திக்கை நோக்கி ஒரு முஹூர்த்த காலம் ஸ்திர ப்ரதிஷ்டிதனாக இவர் இருக்குமிடத்தில் ஸேவை ஸாதித்தருள, இவரும் ஆரூட பக்ஷீச்வரனாய் அந்தர்க் கோபுர மாவிர்ப்பவித்த பகவானுடைய பயிலும் சுடரொளி மூர்த்தியைப் பூர்ணமாக அநுபவித்து க்ருதார்த்தரானார் என்கிற ஐதிஹ்யத்தால் அறியலாம். இப்பொழுதும் 'ஸ்ரீ தொட்டையாசார்யர் ஸேவை' என்று அப்பேரருளாளன் உத்ஸவத்தில் திருவீதியெழுந்தருளாதே அம்மாதிரி நின்று ஸேவை ஸாதித்து வருவது எல்லாருக்கும் தெரியும்.

இதைப் போலவே, நிகமாந்த தேசிகாதிகளான நம் பூர்வாசார்யர்கள் திறத்திலும் இவருக்கிருந்த பக்த்யதிசயம், இவரால் அருளிச் செய்யப்பட்ட ஸ்ரீ தேசிகன் வைபவ ப்ரகாசிகாதிகளில் '[illegible]' என்றும், '[illegible]' என்றும் பஹுமுகமாக இருக்கிற ஸ்தோத்ர வாக்யங்களினாலும், வ்யக்தமாகிறது. மற்றும் இம்மஹாபுருஷனுடைய மஹிமைகளை இங்கு, எழுதுவது அதிக விஸ்தாரத்தை உண்டுபண்ணுமாகையினால் தத்ப்ரதிபாதக க்ரந்தங்களைக் கொண்டு தெரிந்து கொள்வது உசிதம்.

இவர் அருளிச்செய்த 'பரிகர விஜயம்' என்கிற இந்த க்ரந்தத்தில் ஸ்ரீவைஷ்ணவர்கள் அவச்யம் அநுஷ்டிக்க வேண்டிய சக்ராங்கநம் ஊர்த்வ புண்ட்ர தாரணம் இவைகளுக்கு ச்ருத்யாதி ப்ரமாணங்களை விஸ்தாரமாக உதாஹரித்திருப்பதோடு, ஸ்ரீ தேசிகனுடைய ஸச்சரித்ர ரக்ஷைக்குப் பின்பு உண்டான அந்ய மதஸ்தர்களுடைய தூஷணங்களையும் அநுவதித்து விஸ்தாரமாகக் கண்டித்திருப்பதால் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு இந்த க்ரந்தம் மிகவும் உபாதேயமாகக் கடவது.

ஸ்ரீ:

ஸ்ரீமஹாசார்யவிரசித: பரிகரவிஜயாபேதோ க்ரந்த: ||

ஸோऽயம் க்வ வர்த்ததே ஸங்க்ஷ: ?

" யஸ்தோயப்ரவர்ணை: க்ருதஶக்ர்யாஸ

---

ஸ்ரீ:

|| ஸ்ரீரங்கநாயிகாஸமேதஶ்ரீரங்கநாதபரப்ரஹ்மணே நம: ||

அக்ராஹ்யாம் ஶ்ரமநவிஹம்ஷிதபாஹ்யமோஹாம்

வர்ணைர்விப்ருஹம்ஷிததந்முக்தஹரிவாதத்ர்வமைத்ர்யை:|

தஸ்யாஸ்ஸம்ப்ரயஜந்தை: ஸ்திதிமாஹமாஜ:

ஸ்ரீவைஷ்ணவாந் இஹ ஸதைவ ஸமாஶ்ரயாம: ||

ஸ்ரீக்ருஷ்ணர்வ்யமுகர்த்ஸா க்யநாக விஶ்வாவிஶ்வாஸர்வாப்ய

விஜ்ஞாதர்விஶ்வவேதஸளஸிஹ்ருதய: ஸ்ரீவாஸநாஸ ஸர்வ:|

விவ்யாதேந ஸமாயநாஸமர்ணா விஜ்ஞாநத்யாப்யாநா

ஶ்ருத்வாஸ்ராஸ்ய நிபந்தநஸ்ய தநுதே வ்யாவ்யாம் ஸதோஜ்ஞாவிஸாம்||

ஸ்ரீமத் ராமாயணம், பாலகாண்டம் முதலாகப் பல பாகங்களாகப் பிரிந்து வ்யவஹரிக்கப் படுவதுபோல, ஸ்ரீ தொட்டையாசார்யரால் அருளிச் செய்யப்பட்ட

விஷ்ணோ: பதம் த்யாயதி யோ மஹாத்மா ।

---

‘வேதாந்த விஜயம்’ என்கிற க்ரந்தமானது, குருப்ரஸாத விஜயம் ப்ரஹ்மவித்யா விஜயம் ஸத்வித்யா விஜயம் அத்வைத விஜயம் விஜயோல்லாஸம் என்று ஐந்து பாகங்களாகப் பிரித்து வ்யவஹரிக்கப்பட்டிருக்கிறது.

அவற்றுள் ஐந்தாவது பாகமான விஜயோல்லாஸமும் இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டு, முதல் பாகம் ப்ரஹ்மவிதநுகம்பாப்யர்த்தநம் என்றும், இரண்டாவது பாகம் பரிகர விஜயமென்றும் வ்யவஹரிக்கப்படுகிறது. ஆகையினால் வேதாந்த விஜய க்ரந்தத்தின் முதல் பாகமான குருப்ரஸாத விஜய க்ரந்தாரம்பத்தில் ‘வத்ஸாம் ஹொஜாநு—ஶாஸநசர—ஜயஶைலமதாம்’ என்று தொடங்கி அருளிச்செய்யப்பட்ட மங்கள ச்லோகமே ஷ வேதாந்த விஜய க்ரந்தத்தின் ஐந்தாவது பாகமான விஜயோல்லாஸத்திற்கும் அதன் உத்தர பாகமான பரிகர விஜயத்திற்கும் மங்கள ச்லோகமாக இருப்பதால் இந்தப் பரிகர விஜய க்ரந்தத்தின் ஆரம்பத்தில் ஸ்ரீ தொட்டையாசார்யர் விக்ந விகாதார்த்தமாகச் சிஷ்டாசாரஸித்தமான மங்களாசரண ச்லோகத்தை இங்கு தனித்து அருளிச்செய்யவில்லை. இதை வேறு க்ரந்தமாக நினைத்தாலும் இங்கு மங்களச்லோகத்தை எழுதாவிட்டாலும் வாசிகாதிரூபமாக மங்களாசரணத்தை க்ரந்தம் ஆரம்பித்த பொழுது இந்த ஸ்வாமி தனித்துச்செய்திருக்கலாமென்றும் சிலர் சொல்வர். அத—இங்கு ‘அத’ என்கிற பதமானது, ஆநந்தர்யம் (பிறகு) என்கிற பொருளை உடையதாய் விஜயோல்லாஸத்தின் முதல் பாகத்தில் சொல்லப்பட்ட ப்ரஹ்மவிதநுகம்பாப்யர்த்தநத்திற்குப் பிறகு என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறது. உக்தே ஸந்த:—என்பவை ஒரு வாக்யமாய், உக்தே—கீழே சொல்லப்பட்ட (அதாவது—விஜயோல்லாஸத்தின் முதல் பாகத்தின் கடைசியில் ‘ஸாதநாநுஷ்டாநபராஸ் ஸந்த:’ என்றும் ‘ஸம்ஸாரது:க்ஷயதாம் ஸதி:’ என்றும் சொல்லப்பட்டவென்றபடி.) ஸந்த:-ஸத்துக்கள், கெ—எவர்கள் என்கிறார். இதில் ஸத்துக்களுக்குளென்ன அடையாள (லக்ஷணம்) மென்று தாத்பர்யம். இதன் மேல் ‘லஸதூர்த்வபுண்ட்ர’ என்கிற கட சாகை வாக்யமானது இந்த ஸத்துக்களுடைய லக்ஷணத்தைச் சொல்லுகிறதென்கிறார்.

லஸதூர்த்வபுண்ட்ர:—நெற்றி முதலிய இடங்களில் ஊர்த்வமுகங்களான திருமண் காப்புக்களைத் தரித்தவனும், க்ருதபாஹுமூல:—இரண்டு புஜங்களிலும் அக்நியினால் தபிக்கப்பட்ட சங்கம் சக்ரம் இவைகளுடைய அடையாளங்களை உடையவனும், மஹாத்மா—எல்லாராலும் கொண்டாடக் கூடிய ஜ்ஞாநத்தை உடைய

ஸ்வரேண மந்த்ரேண ஸதா ஹ்ருதி ஸ்திதம்
பராத்பரம் யந்மஹதோ மஹாந்தம் ॥''

---

வனை எந்த மனிதன், ஹ்ருதி—தன் ஹ்ருதய கமலத்திலே, ஸ்திதம்—வஸிக்கிற வனையும், பராத் பரம்—அறிவில்லாத வஸ்துக்களைக் காட்டிலும் உயர்ந்தவனை ஜீவாத்மாவைக் காட்டிலும் உயர்ந்தவனையும், மஹத:—ஆகாயம் முதலிய பெரிய வஸ்துக் களைக் காட்டிலும், மஹாந்தம்—பெரியவனை (அதாவது ஒரு விதமாகவும் அளக்க முடியாத பெரிய வஸ்துவான என்றபடி) விஷ்ணும் பரம்—நாராயணனை மாத்ரம் (மற்றொரு தெய்வம் தொழாதே என்றபடி), ஸ்வரேண—ஸ்வர ப்ரதாநமாகையினாலே, (வேதத்தில் 'யஸ்ய வேதாதௌ ஸ்வர: ப்ரோக்த:' என்று ஸ்வரமென்று சொல்லப்படுகிற தான) மந்த்ரேண—ப்ரணவத்தினாலே (இதற்குத் திருவஷ்டாக்ஷரம் முதலான பகவானுடைய மற்ற மந்த்ரங்களாலும் என்று தாத்பர்யம்.) த்யாயதீதி யத்—த்யாநம் செய்கிறான் என்பதுண்டோ, தத்—ஆகையினாலே, ஸ:—அந்த மனிதன், ஸாது—இருக்கிறவனாக, பவதி—ஆகிறான்.

இங்கு, ஸ்ரீ தொட்டயாசார்யர், எவர்கள் ஸத்துக்களென்று கேட்டுக்கொண்டு, இந்த வேதவாக்யத்தினால் சொல்லப்படுகிறவர்களை ஸத்துக்களென்று சொல்லுகிறோ மென்றருளிச் செய்திருப்பதால், அதை அநுஸரித்து, 'ஸாது'—என்கிற பதத்தையும், 'யத்' என்பதற்கு எதிரிடையாக 'தத்' என்பதையும், ஸ: என்பதையும், அவச்யம் அபேக்ஷிதமான 'பவதி' என்கிற க்ரியா பதத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டியது.

ஸ்ரீதேசிகன் ஸச்சரித்ர ரக்ஷையில் இந்த மந்த்ரத்திற்கு எவன் கீழ்ச்சொன்ன ஊர்த்வ புண்ட்ராதிகளோடு த்யாநம் செய்கிறானோ அவன் மஹாத்மா வாகிறான் என்று வ்யாக்யாநம் செய்தருளியிருக்கிறார். அந்தப் பக்ஷத்திலும் 'மஹாத்ம' சப்தம் இங்குக் கீழ் சொல்லப்பட்ட 'ஸத்' என்கிற !சப்தத்தின் அர்த்தத்தையே சொல்லுகிறது. அதெங்ஙனே யென்னில்: தைத்திரீய வேதத்தில் 'அஸந்நேவ' என்று தொடங்கி, 'ஸந்தமேநம் ததோ விது:' என்னுமளவாக ப்ரஹ்ம ஜ்ஞாந மில்லாதவன் அஸத் (இல்லாதவன்) என்றும் ப்ரஹ்ம ஜ்ஞாந முள்ளவனே ஸத் (இருக்கிறவன்) என்றும் சொல்லியிருக்கிறது. இங்கு 'இருத்தல்' என்பது எல்லா வஸ்துக்களுக்கும் ஸாதாரண மாகையினாலும், ப்ரஹ்ம ஜ்ஞாந முள்ளவனுக்கு ஒரு விசேஷம் சொல்லப்பட்டதாக ஆகாதாகையினாலும் இந்த வேத வாக்யம் வ்யர்த்தமாகவே ஆகும். ஆகையினால் 'இருக்கிறான்' என்கிற சப்தத்திற்கு 'இருப்பதின் பயன் பெற்றவனாகிறான்' என்பதே அர்த்தமாய் இவன் மோக்ஷம் பெறுவதற்குக் காரணமான ப்ரஹ்ம ஜ்ஞாநத்துட னிருப்பதைக் குறித்து, 'ஸமஹாத்மா ஸுதுர்லப:' என்று எல்லாராலும் கொண்டாடும்படி இருக்கிறான் என் அர்த்தம் சொல்வதே உசிதமாகும்.

இதி ஶ்ருதிஸ்ம்ருதிபுராணேதிஹாஸேஷு ப்ரஸித்தா இதி ஸூத்ரம்। ஸாதவஶ்சிஹ்நம்

---

ஆக இதனல் 'உத்காதா' என்கிற சப்தத்திற்குப் பொருள் 'கொண்டாடக் கூடிய ஜ்ஞாநத்தை உடையவன்' என்கிற அர்த்தமே 'ஸத்' என்கிற சப்தத்திற்கும் அர்த்தமாக முடிந்தபடியினலே ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷையில் அருளிச்செய்த அர்த்தத்துக்கு விரோத மில்லே.

இந்த வேத வாக்யத்தில் 'யத்தோயேந புண்ட்ர' என்பதினல் புண்ட்ர ஸம்ஸ்காரமும், 'தப்ததநு' என்பதினல் தாபம் என்கிற ஸம்ஸ்காரமும், 'ஸதா த்யாயதி' என்பதினல் 'ஶ்ரவணம் கீர்த்தநம்' என்கிறபடியே அநவரத த்யாநத்தின் பரீவாஹமாக ஸம்பாவிதமான அர்ச்சந வந்தநாதி ரூபமான யாக ஸம்ஸ்காரமும், 'மந்த்ரேண' என்பதினல் மந்த்ர ஸம்ஸ்காரமும், மஹாத்ம சப்த வ்யஞ்ஜிதமாய்ப் பரிசேஷ ந்யாயத்தினல் ஸித்தமான நாம ஸம்ஸ்காரமும் சொல்லப்படுவதோடு, இவைக ளோடு கூடிய பகவானுடைய த்யாநத்தையே முக்யமாகச் சொல்லுவதால், 'தாபஃ புண்ட்ரஸ் ததா நாம மந்த்ரோ யாகஶ்ச பஞ்சம:' என்று சொல்லுப்படுகிற பஞ்ச ஸம்ஸ்காரங்களோடு பகவத் த்யாநம் செய்கிறவனே 'ஸத்' என்று சொல்லப்படுகிற ஸ்ரீ வைஷ்ணவனுகிருன் என்றதாயிற்று.

இதனல் பகவத் பக்தியில்லாத பஞ்ச ஸம்ஸ்கார முள்ளவனும், பஞ்ச ஸம்ஸ்கார மில்லாத கேவல பகவத் பக்தியுள்ளவனும் ஸ்ரீ வைஷ்ணவனல்லன் என்பதும் பஞ்ச ஸம்ஸ்காரத்தோடு பகவத் பக்தியுள்ளவனே ஸ்ரீ வைஷ்ணவ னென்பதும், பஞ்ச ஸம்ஸ்காரம் பகவத் த்யாநத்திற்கு ப்ரதாநமான அங்கமென்பதும் சொல்லப்பட்டதாகிறது. அடியில், 'ஸ ஸாதுஸ் ஸந்த:' என்கிற வாக்யத்தில் பஹு வசநத்தை அநுஸரித்து 'ஸந்த:' அல்லது 'உத்காதார:' என்ருவது பஹு வசநாந்தமாக மாற்றிக்கொள்ள வேண்டியது.

இதி ஶ்ருதி......இந்தக் கட சாகை வாக்யத்தினல் சொல்லப்பட்ட பகவானு டைய சங்கம் சக்ரம் முதலான அடையாளங்களைத் தரிக்குமவர்கள் ஸத்துக்களாகி ருர்கள் என்று சொல்லுகிருேம்.

ஸாதவ......இங்கு சொல்லப்படுகிற பகவானுடைய அடையாளமான சங்கம் சக்ரம் இவைகளைத் தரிப்பது வேதங்களிலும் ஸ்ம்ருதிகளிலும் பாரதம் ...லான இதிஹாஸங்களிலும் புராணங்களிலும் ஸ்ரீ பாஞ்சராத்ரங்களிலும் சிஷ்டர் ... அநுஷ்டாநங்களிலும் ப்ரஸித்தமானது.

# வேதாந்த தீபிகை.

வேதாந்த தீபிகை பத்ரிகையில் ப்ரசுரமாகவேண்டிய கடிதங்கள், ஸ்ரீ வாஸுதேவாசார்யர், ஸம்பாதகர், மாம்பலம், சைதாப்பேட்டை போஸ்டு என்னும் விலாஸத்திற்கும்

மற்றக் கடிதங்கள் மணியார்டர் முதலியவை ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மாசார்யர், கார்யதர்சி, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, திருவல்லிக்கேணி, சென்னை என்னும் விலாஸத்திற்கும் அனுப்பப்பட வேண்டும்.

---

## ஸ்ரீ. வை. ஸி. ஸபை சந்தா வரவு.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ. உ. வே. | எ. கோதண்டராம அய்யங்கார், கும்பகோணம் | 3 | 0 | 0 |
| ,, | வி. கோபால் அண்டு பிரதர்ஸ், திண்டிவனம் | 4 | 0 | 0 |
| ,, | என். கே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், கண்ணனூர் | 3 | 0 | 0 |
| ,, | ஜி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், உதகமண்டலம் | 3 | 0 | 0 |
| ,, | எம். கே. ராமாநுஜாசார்யர், நெல்லூர் | 3 | 0 | 0 |
| ,, | வி. கோவிந்தராஜ அய்யங்கார், தூசி | 1 | 8 | 0 |
| ,, | ஸி. வேதாந்த தேசிகாசாரியார், சேலம் | 3 | 0 | |
| ,, | எ. வி. ராமஸாமி அய்யங்கார், சங்கிரி துர்க் | 3 | | |
| ,, | என். கிருஷ்ணமாசாரியார், திருவட்டிபுரம் | 3 | | |
| ,, | எ. ராமாநுஜாசாரியார், மதுராந்தகம் | 3 | 0 | |
| ,, | கே. சுந்தர ராமய்யர், கும்பகோணம் | 3 | | |
| ,, | ராஜகோபால அய்யங்கார், தில்லஸ்தானம் | 3 | 0 | |
| ,, | எஸ். சக்ரபாணி அய்யங்கார், நாட்டம் | 3 | 0 | |
| ,, | பி. டி. சேஷாத்ரியாசாரியார், திருப்பத்தூர் | 3 | 0 | |
| ,, | கே. என். ராமஸ்வாமி அய்யங்கார், மதுரை | 3 | 0 | |
| ,, | வி. ராமஅய்யங்கார், கோபிசெட்டிபாளையம் | 6 | | |
| ,, | திருவேங்கடஸாமி அய்யங்கார், அவனாசி | | | |
| ,, | எஸ். ராமஸ்வாமி அய்யங்கார், என்னூர் | | | |

ஸ்ரீ. உ. வே.

| | | | | |
|---|---|---|---|---|
| ,, | பி. சாரங்கபாணி அய்யங்கார், மைலாப்பூர் | 3 | 0 | 0 |
| ,, | ஆர். கிருஷ்ணமாச்சாரியார், ஸ்ரீரங்கம் | 3 | 0 | 0 |
| ,, | கே. சக்ரபாணி அய்யங்கார், பவானி | 3 | 0 | 0 |
| ,, | ராஜாபகதூர் ஜி. கிருஷ்ணமாச்சாரியார், ஸ்ரீரங்கம் | 5 | 0 | 0 |
| ,, | எ. ஸ்ரீநிவாஸ ராகவய்யங்கார், பட்டுக்கோட்டை | 3 | 0 | 0 |
| ,, | எ. ரங்கஸ்வாமி அய்யங்கார், இருகரை | 3 | 0 | 0 |
| ,, | வி. ரங்கஸாமி ஐயங்கார், திருச்சி | 5 | 0 | 0 |
| ,, | டி. ராஜகோபாலாசாரியார், கம்மபுரம் | 3 | 0 | 0 |
| ,, | முத்து சுப்பாரெட்டியார், வளவனூர் | 6 | 0 | 0 |
| ,, | து. சீனிவாஸ நாயர், காஞ்சிபுரம் | 3 | 0 | 0 |
| ,, | ஏ. நரஸிம்மாசாரியார், தஞ்சாவூர் | 3 | 0 | 0 |
| ,, | கெ. வி. ராகவாசாரியார், நெல்லூர் | 3 | 0 | 0 |
| ,, | கெ. கிருஷ்ணமாசாரியார், நடாதூர் | 3 | 0 | 0 |
| ,, | வி. ஸ்ரீனிவாஸலு நாயுடு, மணப்பாரை | 3 | 0 | 0 |
| ,, | ஸி. எ. சடகோபாசாரியார், கள்ளக்குரிச்சி | 3 | 0 | 0 |
| ,, | பி. கே. ஸ்ரீனிவாஸ ஐயங்கார், ஸ்ரீரங்கம் | 6 | 0 | 0 |
| ,, | ஏ. ராகவாசாரியார், கும்பகோணம் | 5 | 0 | 0 |
| ,, | எஸ். எ. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கோணப்பேட்டை | 3 | 0 | 0 |
| ,, | எம். செல்லம் ஐயங்கார், மணவாஸி | 3 | 0 | 0 |
| ,, | ஸுப்பலக்ஷிமி அம்மாள், மாம்பலம் | 3 | 0 | 0 |
| ,, | வி. எஸ். ஸ்ரீனிவாஸ ஐயங்கார், சிக்கப்பெருமாள்கோயில் | 1 | 8 | 0 |
| ,, | கே. டி. வராகாசாரியார், பங்களூர் | 3 | 0 | 0 |
| ,, | ஆர். வரதராஜ ஐயங்கார், மாணிக்கபுரம் | 3 | 0 | 0 |
| ,, | ஆர். பத்மனாபாசாரியார் | 3 | 0 | 0 |
| ,, | பி. ஸ்ரீவெங்கடாசார்யர், தேவனூர்விளாகம் | 3 | 0 | 0 |
| ,, | ஆர். நரஸிம்ம ஐயங்கார், மதுரை | 3 | 0 | 0 |
| ,, | வி. கே. குப்புஸாமி ஐயங்கார், புலிப்பாக்கம் | 3 | 0 | 0 |
| ,, | வி. சேஷ ஐயங்கார், கோயம்புத்தூர் | 3 | 0 | 0 |
| ,, | டி. ராஜகோபாலாசாரியார், சேலம் | 3 | 0 | 0 |
| ,, | எஸ். ராகவாசாரியார், கும்பகோணம் | 3 | 0 | 0 |
| ,, | ஆர். கோபாலஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீரங்கம் | 3 | 0 | 0 |
| ,, | வி. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ராணிப்பேட்டை | 3 | 0 | 0 |
| ,, | கே. டி. பார்த்தஸாரதி அய்யங்கார், வேலூர் | 10 | 0 | 0 |
| | ஜி. ராமஸ்வாமி அய்யங்கார், திருவல்லிக்கேணி | 6 | 0 | 0 |
| | கிடாம்பி ராமாநுஜாசார்யர், மோஹனூர் | 3 | 0 | 0 |
| | [illegible] வி. வெங்கடாசார்யர், நாமக்கல் | 5 | 0 | 0 |
| | [illegible] ராகவ ஐயங்கார், நாமக்கல் | 3 | 0 | 0 |
| | [illegible] ஸாமி செட்டியார், விஜயபுரம் | 3 | 0 | 0 |
| | [illegible] ஐயங்கார், வத்தலகுண்டு | 3 | 0 | 0 |